1044

சொந்தகர்த்தா
பிரசுரகர்த்தா } வை. மு. கோதை நாயகி அம்மாள்

மலர் III. 1925 இதழ் 1

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
RECORD
MADRAS

# JEGAN MOHINI

# ஜெகன்மோகினி.



ஜெகன்மோகினி ஆபீஸ்,
26, தோடித் தெரு,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

# ஜெகன்மோகினி.

இது நாவல்கள் அடங்கிய ஒரு மாதாந்த சஞ்சிகை. பிரஸித்திபெற்ற நாவல் ஆசிரியரான—ஸ்ரீமான் வடுவூர். கே. துரைஸாமி ஐயங்கார் அவர்கள் B. A. யால் இயற்றப்பெற்ற காளிங்கராயன் கோட்டை ரகஸியம், விலாஸவதி முதலிய மகா அற்புதமான நாவல்கள் இந்த சஞ்சிகையின் வாயிலாகவே வெளிவந்தன. இந்த சஞ்சிகையின் 3-வது ஆண்டு நாளது 1925௵ செப்டெம்பர் ௴ 15௳ முதல் ஆரம்பமாகிறது. இந்த மூன்றாவது ஆண்டில், ஷை நூலாசிரியரால் பார்வையிடப்பட்டதும், திருவல்லிக்கேணியிலுள்ள ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் என்பவரால் இயற்றப்பட்டதுமான வைதேகி என்ற ஓர் அதிசயமான நாவல் வெளியாகப்போகிறது. நம் தேசத்துப்பெண்மணிகள் தெரிந்து கொள்ளத்தக்க படிப்பினைகளும் குடும்ப விஷயங்களும் இதில் ஏராளமாக அடங்கி இருக்கும். மாதம் ஒன்றுக்கு டிம்மி 40 பக்கங்கள் உள்ள கதை வெளியாகும்.

| | |
|---|---|
| உள் நாட்டுக்கு வருஷ சந்தா | ரூ. 1 8 0 |
| பினாங்கு, சிங்கப்பூர் முதலிய அயல் தேசங்களுக்கு | ரூ. 2 0 0 |

அயல்நாட்டாருக்கு வி. பி. யில் அனுப்பினால் தபாற் செலவு மாத்திரம் ரூ. 1—4—0 ஆகுமாதலால் அவர்கள் சந்தாப்பணத்தை மணியார்டராகவே அனுப்பவேண்டும்.

| | |
|---|---|
| மாதிரிப் பிரதியின் விலை | ரூ. 0 3 0 |

விளம்பர விகிதம் எழுதித்தெரிந்து கொள்ளவும்.

இந்த சஞ்சிகை வேண்டுவோர் அடியில் காணப்படும் விலாஸத்திற்கு எழுதவும்:—

மானேஜர்,

ஜெகன்மோகினி ஆபீஸ்,

26. தேரடித் தெரு,

திருவல்லிக்கேணி, சென்னை.

# விக்ஞாபனம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
4 DEC 1925
MADRAS

தமிழ்நாட்டு ஸகோதர ஸகோதரிகளே!

**நா**வல் இயற்றுவதற்கு விசேஷமான உலக அநுபவமும், தமிழில் பாண்டித்யமும், இதர தேச பாஷைகளின் பரிச்சயமும், அபாரமான கற்பனாசக்தியும் இன்றியமையாத அம்சங்களென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். அவற்றுள் எதையும் நான் பெற்றவளன்று. எனது கிரக கிருத்தியங்கள் முடிந்த பின்னர் ஒழிந்த நேரங்களை வீணாக்காது பயன்படுத்தி நான் உருப்படுத்தி வைத்த நாவல்களை எனது சிநேகிதைகளுள் சிலர் பார்வையிட்டு, நிரம்பவும் புகழ்ச்சியான மொழிகள் கூறி, என்னை ஊக்கினராதலின், அவற்றுள் ஒன்றை நான் இந்தப் பத்திரிகையின் வாயிலாக வெளியிட முன் வந்தேன். மகா அற்புதமான நூல்களை இயற்றி, என்றும் அழியாப்புகழும் பெயரும் பெற்று விளங்கும் நாவலாசிரியர்களுக்கு முன்னால், ஒன்றுமறியாப் பேதையாகிய நானும் ஒரு கிரந்தகர்த்தா வென்று வெளிப்படுவது சிறிதும் ஒவ்வாதாயினும், தமிழ்ப்பாஷையின்மீது கொண்டுள்ள ஆசையினால் வெட்கமறியாது நான் இக்காரியத்தைச் செய்யத்துணிந்தேன். ஆன்றோர், இதிலுள்ள குற்றங்களை விலக்கி, குணமேதேனுமிருப்பின், அதை ஏற்று. எனது சொந்தப் பத்திரிகையான இந்த ஜெகன்மோகினியை ஆதரிக்குமாறு நிரம்பவும் பணிவாக வேண்டிக்கொள்கிறேன்.

இப்பத்திரிகையில் வெளிவரும் நாவலை ஒரு பொருட்டாய் மதித்து, தமது தேக அசௌக்கியத்தையும், தமது இதர ஜோலிகளையும் பாராட்டாது இதைப் பார்வையிட்டுதவிய ஸ்ரீமான், உ. வே. வடுவூர் கே. துரைஸாமி ஐயங்கார் அவர்களுக்கு நான் வணக்கமாக தண்டன் சமர்ப்பிக்கிறேன்.

இங்ஙனம்:

தங்கள் ஸகோதரி,

**வை. மு. கோதை நாயகி.**

# வைதேகி

## ஓர் அபூர்வத் தமிழ் நாவல்

வை. மு. கோதை நாயகி அம்மாளால்
இயற்றப்பெற்று

வடுவூர். கே. துரைஸாமி ஐயங்கார் அவர்களால்
பார்வையிடப்பெற்று

சென்னை, திருவல்லிக்கேணி
ஜெகன்மோகினி ஆபீஸாரால்
வெளியிடப்பட்டது.

1925

சென்னை,

நோபில் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
182819
சென்னை

ஓம்.

# வைதேகி

## 1-வது அதிகாரம்.

### குடியைக் கெடுத்த கூனற்கிழவி.

சென்னை திருவல்லிக்கேணியிலுள்ள ஆலங்காத்தாபிள்ளை தெருவென்பது வடக்கு தெற்காக அமைந்துள்ள ஒரு குறுகிய சந்து. அந்தத் தெருவின் மேற்குச் சாரியில் காணப்பட்ட ஒரு வீட்டின் மேன்மாடத்தில் போடப்பட்டிருந்த விசிப்பலகையின்மீது புஸ்தகமும் கையுமாய்த் தெற்குப் பார்த்த முகத்தோடு வீற்றிருந்த ஒரு பெண்வடிவம் தென்பட்டது. நாம் இந்தக் கதையைத் தொடங்கும் சமயம் மாலை வேளையாதலால், கிழக்குத் திசையிலுள்ள கடலிலிருந்து வீசிய, ஜிலுஜிலென்று குளிர்ந்திருந்த மந்தமாருதம் உல்லாஸமாக அந்த மேன்மாடத்திற்குள் புகுந்து புஸ்தகத்திலிருந்த விஷயத்தைப் படிப்பதில் தனது மனதை லயிக்கவிட்டு மெய்ம்மறந்து சுவர்ணவிக்கிரகம் போல வீற்றிருந்த யௌவன மங்கையின்மீது ஏறித்தவழ்ந்து, அவளது ஆடையைப் பிடித்திழுத்து, கண்ணாடிபோன்ற அழகுத்திரளான அவளது கன்னங்களில் முத்தமிட்டு, செவிகளில் காதல் மந்திர ரகஸியங்களை உபதேசித்து, அவளது சுந்தரவடிவத்திற்கு ஆநந்தத் தாலாட்டுப்பாடி, மனதைப் பரவசப்படுத்திக் கொண்டிருந்தது. அந்த வீடு அதிகப் பெரிய கட்டிடமல்லவாதலால், அதன் மேன்மாடத்தில் ஒரே ஓர் அறையும் ஒரு சிறிய கூடமுமே காணப்பட்டன. அந்த யௌவனப் பெண்பாவை உட்கார்ந்திருந்த விசிப்பலகைக்கருகில் சுவரில் பொருத்தப்பெற்றிருந்த ஓர் அலமாரியின் பெரும்பாகத்திலும் 15, அல்லது, 20-புஸ்தகங்கள் காணப்பட்டன. மிகுதி பாகத்தில் நல்லெண்ணெய், சீப்பு, ஊசி, நூல்பட்டை முதலிய பற்பல சில்லரைப் பொருட்கள் காணப்பட்டன. அவற்றைத் தவிர அந்த அறையிலும் கூடத்திலும் வேறு எவ்வித சாமானும்

காணப்படவில்லை. அந்த மேன்மாடம் அதிக ஆடம்பரமும், அலங்காரமும், செல்வச்சின்னங்களும் இல்லாததாய், ஏழ்மை நிலைமையை வெளிப்படுத்தியதா யிருந்ததானாலும், அது நன்றாக மெழுகிப் பெருக்கி, ஓர் அற்ப மாசு மற்று மகா பரிசுத்தமாகக் காணப்பட்டது. ரவிவர்மாவின் படங்களும், இதர வசிகர அலங்காரங்களும் நிறைந்த மாளிகைகளுக்குள் புகுந்தால் மனிதரது மனதில் எவ்வளவு ஆநந்தம் தோன்றுமோ, அதைவிட நூறுமடங்கு அதிகப் பேராநந்தமும், மனத்திருப்தியும், அந்தத் துல்லியமான மேன்மாடத்தில் புகுவோரது மனதில் நிச்சயமாக உண்டாயிற்று. அந்த மேன்மாடம் எப்படி செயற்கை யலங்காரமின்றி இயற்கையழ கொன்றினாலேயே இன்ப நிறைவாக விளங்கியதோ, அதற்கு ஒத்தபடியே அவ்விடத்தில் கோவில் கொண்டிருந்த பெண் தெய்வத்தின் தோற்றமும் குணாதிசயங்களும் இயற்கை விசேஷமொன்றையே பெற்று ஒப்பற்று விளங்கின. அந்த மடந்தைக்கு சுமார் 15 அல்லது, 16-வயதிற்குமேல் இராதென்பது சந்தேகமறத் தெரிந்தது. அவளது மேனி தந்தத்தினால் கடைந்தெடுக்கப்பட்டது போலத் தோன்றினாலும், தந்தத்தின் முழு வெண்மைநிறம் அவளிடத்தில் காணப்படவில்லை. ஒருகால், மெருகு கொடுக்கப்பெற்ற தங்கத்திற்கு அவளது மேனியை உவமை சொல்லலாமோ வென்றால், சொல்லலாம். ஆனால், மெருகு கொடுக்கப்பட்ட தங்கம் பார்ப்பதற்கு மகா வசிகரமாக இருந்தாலும், அதனிடம் மிருதுவின்மையும், உயிரற்ற ஜடத்தன்மையும் இருக்குமாதலால், அந்த அம்சங்களிலும் இரண்டும் பேதப்பட்டன; நல்ல புதிய எலுமிச்சம் பழத்தின் நிறத்திற்கு அதை ஒப்பிடலாமோ வென்றால், அதன் மஞ்சள் நிறம் அவளிடம் காணப்பட்டது உண்மையானாலும், அவளது உடம்பின் பளபளப்பும், அற்புத வசீகரத் தோற்றமும் எலுமிச்சம் பழத்தில் இல்லையென்றே சொல்லவேண்டும். ஆகவே, அவளது தேகம், தந்தம், தங்கம், எலுமிச்சம் பழம், மான், ரோஜாப்புஷ்பம் முதலியவற்றை உடனே நினைப்பூட்டியதானாலும், அது எல்லாவற்றின் சிறப்புகளையும் பெற்று, அவைகளைக் காட்டிலும் ஆயிரமடங்கு சிரேஷ்டமானதாக அமைந்திருந்தது. எந்தெந்த வஸ்துக்களைக் கொண்டு, அந்த உன்னத வடிவமும், அவளது மேனியின் வண்ணமும் சிருஷ்டிக்கப்பட்டனவோ வென்பதை, அவளைப்

படைத்த பிரம்மாகூட அறிவானோ வென்பது சந்தேகம். அத்தகைய சர்வ சிலாக்கியமான மேனி அமைப்பும், காந்தியும் வாய்ந்தவளாய்க் காணப்பெற்ற அந்த அணங்கு மகா அற்புதமான கட்டழகு நிறைந்த கந்தருவ மாதுபோலக் காணப்பட்டாள். அவளது கைகள் கால்கள் முதலிய ஒவ்வோர் உறுப்பும், உருட்சித்திரட்சியும், சம்பூர்ணநிறைவும், யௌவனப் புதுமையும், பரிபக்குவக்கனிவும் நிறைந்து, எவ்விதக் குற்றம் கூறுவதற்கும் இடமின்றி நிகரற்ற உத்தமசிருஷ்டியாகக் காணப்பட்டன. அவளது உடம்பு அதிக உயரமாகவாவது, பருமனாகவாவது இல்லாமல், நடுத்தரப்பருமனும், உயரமும் உடையதாய்த் தோன்றியது. அந்த ஏந்தெழில் மடமங்கையின் முகத்தழகை வர்ணிப்பது மகா துர்லபமான காரியமென்றே சொல்லவேண்டும். அவளது, நெற்றி, புருவவிற்கள், கண், மூக்கு, அதரங்கள், மோவாய், கன்னங்கள், காதுகள் ஆகிய எட்டு அங்கங்களும் அஷ்டாக்ஷரச் சக்கரம்போல அதனதன் இடத்தில் அமைந்து நின்று இந்த உலகையே ஆட்டி வைக்கத் தக்க மாத்திரைக்கோல் போன்ற மகா அற்புதமான மந்திர சக்தி வாய்ந்தவையாய் விளங்கினதன்றி, ஒவ்வோர் அங்கமும் ஒவ்வோர் அரிய தன்மையைச் சுட்டியது. எடுப்பாகவும் பிறைச் சந்திரனைப்போலவும் காணப்பட்ட அவளது நெற்றி மேம்பட்ட பகுத்தறிவையும் பெருந்தன்மையையும் காட்டியது. மன்மதனது விற்களோவென மதிக்கத்தக்க அவளது புருவவிற்கள் புத்தியின் கூர்மையையும் தீவிரசக்தியையும் விளக்கின. கயல் மீனைப்போலப்பிறழ்ந்து கொண்டிருந்த அவளது பெருத்த கருவிழிகள் ஆழ்ந்த ஞானத்தையும் கல்வி முதிர்ச்சியையும் பளீர்பளீரென்று வெளிப்படுத்திக் கொண்டிருந்தன. அவளது அற்புத வதனத்திற்கு நடுநாயகமாய் வீற்றிருந்த நாசியோ மாடப்புறாவின் சாந்த குணத்தை நினைப்பூட்டியது. சிவந்து கனிந்து அமிர்த கலசத்தின் மூடிகள்போலத் தோன்றிய அவளது அதரங்கள் பொறுமை, தூய்மை முதலிய அரிய குணங்களைக் காத்த கபாடங்கள்போல அமைந்திருந்தன. தேவர்களும், மூவர்களும், பாற்கடலைக் கடைந்து, சங்கநிதி, பதுமநிதி முதலிய சகலமான தெய்வீகச் செல்வங்களையும், தேவாமிருதத்தையும், மகா லக்ஷ்மியையும், கற்பக விருக்ஷத்தையும், காமதேநுவையும், இன்னம் மற்றுமுள்ள அரிய வஸ்துக்களையும் கண்டெடுத்தது

போல, அமிர்தம்போன்ற சொற்களும், கனியோ பாகோவென்னத் தகுந்த பாடலும், சொற்சுவை பொருட்சுவை நிறைந்த மேலான விஷயங்களும் அவளது வாயிலிருந்து உற்பத்தியாவதற்கு அமைக்கப்பட்ட தாழிபோல அவளது மோவாய் அமைந்திருந்தது. முகத்தின் இருபுறங்களிலும் அழகே வடிவாகத் திணிர்திருந்த உருண்டை கன்னங்களிரண்டும் அவளது கற்பின் உறுதியைக் காட்டும் திண்ணிய கோட்டை மதில்கள்போலவும், செவிகளிரண்டும் பகைவர்கள் அந்தக் கோட்டைக்குள் நுழையாதபடி எப்போதும் மூடி வைக்கப்பட்டுள்ள கோட்டை வாயில்கள் போலவும் அமைந்திருந்தன. இவையனைத்திற்கும் நவரத்ன கிரீடம் வைத்ததுபோல, அவளது சிரத்தில் நீண்டு கருத்து அடர்ந்து நெளிந்து கரும்பட்டுப்போல ஒளிர்ந்து நிறைந்து, காண்போர் மனதைக் கொள்ளைகொண்ட அளகபாரம் கண்கொள்ளா அழகுத்திரளாய் அமைந்திருந்தது. அழகே உருவாய்த் திரண்டு, உத்தம குணங்களே கிரணங்களாய் வீசி நிலவெரித்து ஒப்பற்ற தனிப்பூர்ண சந்திரனாய் விளங்கிய அந்த மடவன்னம் உயர்ந்த ஆடையாபரணங்கள் முதலிய செயற்கை அணிகளை அதிகமாய்ப் பெறாமல் தனது இயற்கைச் சிறப்பினாலேயே தனிச்சுடர்போல நிரம்பவும் மனோகரமாய் விளங்கினாள். தயை, ஜீவ காருண்யம் முதலிய சிறந்த குணங்கள் அவளது கண்களில் ஜ்வலித்துக்கொண்டிருந்தன. நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு, மிருதுத்தன்மை, அடக்கம், பணிவு முதலிய மகடூக்குணங்களையெல்லாம் அவளது ஒவ்வோர் அங்கமும் அவளுக்குத் தெரியாமலேயே வெளிப்படுத்திக்கொண்டிருந்தன. அத்தகைய அபூர்வகுண மடமாதைக் கண்டு களிவெறிகொண்டு மதிமயங்கி நிர்த்தனம் செய்வதுபோலக் கடற்காற்று அவளைச் சூழ்ந்து லீலைகள் புரிந்து அவளது மனதை ரஞ்சிக்கச்செய்து கொண்டிருக்க, அவ்வாறு தனது திருஷ்டியில் படாமல், வாயுபகவான் அரூபவானாய் மறைந்து நின்று தன்னைக் களிக்கச்செய்வதை உணராது அந்தப் பெண்மணி தனது கையிலிருந்த கம்பராமாயணப் பாக்களைப் படித்து மட்டுக்கடங்கா ஆனந்த மதுபவிப்பதிலேயே தனது முழு மனதையும் செலுத்தி இருந்தாள்.

அவ்வாறு அந்த மெல்லியல் மடமங்கைதனக்குத்தானேயுண்டாக்கிக்கொண்ட பேரின்ப வெள்ளத்தில் ஆழ்ந்து மெய்ம்மறந்து மூச்சுப்

பேச்சின்றி சித்திரப் பதுமைபோல அசைவற்று வீற்றிருக்க, அவ ளிருந்த மேன்மாடத்திற்கு வரும் படிகளின் வழியாக யாரோ மெது வாக ஏறிவரும் காலடியோசை யுண்டாயிற்று. அந்த ஓசை மேலே இருந்த யௌவன மின்னாளின் செவியில் பட்டதாயினும், அவளது மனம் முற்றிலும் வேறிடத்தில் சென்று லயித்திருந்த தாதலின், அவள் அதைக் கவனிக்காமல், கம்பராமாயணம் அயோத்தியாகாண்டத் தில் கூனி ராமனைக் காட்டிற்கு அனுப்புமாறு தசரதனிடம் கேட் கும்படி கைகேயிக்கு துர்ப்புத்திக் கூறிய படலத்தைப் படித்துக் கொண்டிருந்தாள். அந்த சந்தர்ப்பத்தில் கைகேயி தனியாய்ப் படுத் திருந்த கோலத்தை கம்பர் வர்ணித்திருந்த,

"நாற்கடற் படுமணி நளினம் பூத்ததோர்
பாற்கடற் படுதிரைப் பவள வல்லியே
போற்கடைக் கண்ணளி பொழியப் பொங்கணை
மேற்கிடந்தாள்தனை விரைவில் எய்தினாள்."

என்ற செய்யுளைப் படித்து, அதன் ஒப்பற்ற அழகில் ஈடுபட்டு, அதன் ஒவ்வோர் சொல்லையும் மென்று சுவைத்து அமிர்தபானம் செய்து, ததேவத்யானமாய் வீற்றிருக்க, அடுத்த நிமிஷம் ஒருகூனற் கிழவி அந்த யௌவனப் பெண்மணிக்கெதிரில் வந்து தோன்றினாள்.

"தோன்றிய கூனியும் துடிக்கு நெஞ்சினாள்,
ஊன்றிய வெகுளியால் உளைக்கும் நெஞ்சத்தாள்,
கான்றெரி நயனத்தாள், கதிக்கும் சொல்லினாள்,
மூன்றுல கினுக்குமோர் இடுக்கண் மூட்டுவாள்."

என்று கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர் வர்ணித்துள்ள லக்ஷணங்கள் யாவும் நமது கூனற்கிழவியிடம் பொருந்தி யிருந்தன. அந்தக்கூனற் கிழவிக்கு சுமார் அறுபத்தைந்து வயது நிறைந்திருக்கலாம். அவ ளது இடுப்பு வளைந்து முன்பக்கத்தில் சாய்ந்துபோனது பற்றி, அவள் தனது கையில் ஒரு கோலை ஊன்றியிருந்த தோற்றம் "எ" என்ற எழுத்தை நினைப்பூட்டியது. ஆனாலும், அவளது உடம்பு எஃகின் பலத்தையும், மனது வஜ்ஜிரத்தின் வலுவையும் கொண் டிருந்தனவாதலால், அவளது ஊக்கமும் மனோவேகமும் பாலியப் பருவத்தினருக்கும் இருப்பதரிதென்றே எண்ணவேண்டும். அவளது

வாயில் மருந்துக்கும் ஒரு பல்கூட இல்லாமல் எல்லாம் செலவு பெற்றுக்கொண்டு போய்விட்டதோடு, பாலியத்தில் கொழுத்திருந்த சதைப்பிடிப்பெல்லாம் சுருங்கிப் போயிருந்தமையால், அவளது முகம் காய்ந்து இறுகிப்போன பேரீச்சம்பழம்போலத் தோன்றியது. அவளது யௌவனகாலத்தில், அவள் நிரம்பவும் அழகு வாய்ந்தவளென்று எல்லோரும் கூறிப்புகழ்ந்ததை அவள் கேட்டிருந்தவளாதலால், அந்த அழகு தன்னிடம் இன்னமும் இருந்ததாகவும், தான் அப்போதும் யௌவனக்குமரியென்றும் நினைத்துக்கொண் டிருந்தாள். யாராகிலும் அவளைப் "பாட்டீ" என்று அழைத்துவிட்டால், அவளுக்கு அபாரமான கோபம் வந்துவிடும். அப்படிக் கூப்பிட்டது பத்து வயதுச் சிறுவனுயிருந்தால்கூட அவனை "என் தாத்தா! நானு உனக்குப்பாட்டி? உங்கள் அம்மாள், அக்காள், தங்கை எல்லோருந்தான் பாட்டி, நானுபாட்டி" என்பாள். அவளுக்குப் பற்கள் போய்விட்டனவானுலும், அவள் ஒரு சிறிய இரும்பு உரல், உலக்கை ஆகிய இரண்டு ஆயுதங்களையும் தன்னோடு கூடவே வைத்துக்கொண்டு சதாகாலமும் டொக்கு டொக்கென்று இடித்து வெற்றிலை பாக்குத்துகையல் செய்து, அதை வாயில் போட்டு மென்றுகொண்டே இருப்பாள். அவளது உதடுகள் மிதமிஞ்சிய உழைப்பினல் முற்றிலும் தளர்ந்து போயிருந்தமையால், இரைதின்ற புலியின் கடைவாய்களிலிருந்து இரத்தம் ஒழுகுவது போல அவளது கடைவாய்களிலிருந்து எப்போதும் தாம்பூலரஸம் இரண்டு தாரைகளாய் இறங்கிக் கொண்டே இருக்கும். அது நிற்க, மூக்குப்பொடி போடுவதில் அவளை வெல்லக்கூடியவர்கள் இந்த உலகில் யாரேனும் இருப்பரோ என்பதே சந்தேகமான விஷயம். மற்றவர் ஒருநாளைக்குள் ஒரு பைசா விலையுள்ள பொடியை சுவாசித்தால், அவள் குறைந்தது, ஓர் அணு விலையுள்ள பொடியையாவது ஒரு நாளைக்குள் உறிஞ்சித் தீர்த்துவிடுவாள். அவ்வாறு மூக்குப்பொடி இழுத்திழுத்து, நாசித்துவாரங்கள் இரண்டும் கோட்டை வாயில்கள்போல அகன்றுபோய் விட்டமையால், அவளுக்கு இரண்டுவிதமான லக்ஷணங்கள் ஏற்பட்டன. அவளது வாயிலிருந்து தாம்பூலரஸம் பெருகுவதற்கு உபநதிபோல மூக்கிலிருந்து புகையிலை ரஸ வெள்ளமும் ஓயாமல் வழிந்து கொண்டே இருக்கும். அதுவுமன்றி அவள் பேசமுயன்ருல், அவ

ளது தொனியில் பெரும்பாகமும் நாசித்துவாரத்தின் வழியாக ஓடி வந்துவிடுமாதலால், அவள் எப்போதும் மூக்கினுலேயே னொண னொணவென்று பேசுவாள். அவளது கூனிய வடிவமும், சுருங்கி விகாரப்பட்ட முகமும், னொண னொணவென்று மூக்கால் பேசும் கீச்சுக்குரலும் பரம ஆபாசமாயிருந்தமையால், அவளைப் பார்ப்போர் அவளிடம் முற்றிலும் அருவருப்பும், அச்சமும் கொள்வரென்பது திண்ணம். அத்தகைய அற்புத ரூபலாவண்யம் பொருந்திய கூனற் கிழவி மேன்மாடத்திலிருந்த யௌவனப் பொற்கொடியாளின் முன் னுல் வந்து நின்று ரௌத்திராகாரமாக அவளை ஒரு பார்வை பார்த்து, பலமாக ஒரு கனைப்புக் கனைத்துக்கொண்டாள். அவளது வாயிலிருந்து புறப்படப்போகும் சொல்மாரிக்கு முன்னறிகுறியாக இடி இடிப்பதுபோல, அவளது கனைப்பு மகா பயங்கரமாக இருந்தது. குழிவடைந்திருந்த அவளது கண்களிலிருந்து மின்னல்கள் தோன்று வதுபோல கோபப்பொறிகள் பறந்தன.

அவளது கனைப்பின் ஓசையைக் கேட்டபோதே, அவள் வந் திருக்கிறுளென்ற விஷயத்தை அந்த யௌவனமாது உணர்ந்து, நிரம்பவும் பயந்து குன்றிப்போய் மிகுந்த ஸஞ்சலத்தி லாழ்ந்து போனுள். கிழவி இன்ன கருத்தோடு வந்திருக்கிறுளென்ற குறிப் பும் நன்றுகத் தெரிந்ததாகையால், தான் அவளோடு பெருத்த சச் சரவு செய்ய நேருமே என்ற கவலை அப்போதே தோன்றி வதைக்க வாரம்பித்தது. அவளது கவனம் அவளது கையிலிருந்த புஸ்தகத் தின்மீது செல்லவில்லையானுலும், அவள் அதனுல் தனது முகத்தை மறைத்த வண்ணம் மௌனமாக வீற்றிருந்தாள்.

கூனற்கிழவி மறுபடி முன்னிலும் பலமாக இன்னெரு கனைப் புக் கனைத்துத் தனது தொண்டையை செப்பனிட்டுக்கொண்டு "என்ன வைதேகி! நான் சொன்னதென்ன? நீ செய்கிறதென்ன? இன்னமுமா படித்துக்கொண் டிருக்கிறுய்! இந்தப் பாழும் புஸ்தகங் களையெல்லாம் எடுத்து அடுப்பில் போட்டுக் கொளுத்திவிட்டால் தான் உன் பைத்தியம் தெளியும்போ லிருக்கிறது. 'என்னவோ அண்டைவீட்டுப் பெண்கள் பள்ளிக்கூடத்துக்குப் போய்விட்டு வரு கிறுர்களே, நாமும் நம்முடைய குழந்தையை அனுப்புவோம், சமயா சமயங்களில், வேண்டிய மனிதர்களுக்கு கடிதம் எழுதுவதற்காவது

தெரிந்துகொள்ளட்டும்' என்று நினைத்து உன்னை நான் படிக்க வைத்தது கொள்ளிக்கட்டையால் தலையைச் சொறிந்துகொண்டது போலப் பெருத்த அனர்த்தமாக முடிந்துவிட்டதே. எப்போது பார்த்தாலும் ஓயாமல் புஸ்தகங்களையே கட்டி அழுதுகொண் டிருக்கிறாயே. இந்தப் புஸ்தகங்கள் நமக்குச் சோறுபோடுமா? நம்முடைய குலத்தொழிலென்ன? நம்முடைய யோக்கியதை என்ன? நமக்குப் புஸ்தகமென்ன வேண்டி இருக்கிறது? காலா காலத்தில் நம்முடைய தொழிலைச் செய்து நாலுகாசு தேடிவைத்துக்கொண்டால்தானே, நம்முடைய ஜீவனமும் நடக்கும்; மற்றவர்கள் நம்மை ஒருமனிதாக மதிப்பார்கள். நான் சின்னக்குமரியா யிருந்த வரையில் மகா மகா பெரிய மனிதர்களெல்லோரும் என் வீட்டு வாசலில் வந்து, நான் எப்போது வாயைத் திறந்து ஒரு வார்த்தை சொல்லப் போகிறேனென்று என் தயவை எதிர்பார்த்துத் தொண்ணூந்து நின்றார்கள். இப்போது நான் கிழவியாய்ப் போய்விட்டேனும். எந்த நாய்ப்பயலும் என்னைச் சிந்துகிறதில்லை. எல்லோரும் உன்னைப் போலிருக்கும், எட்டும் இரண்டும் தெரியாத வழுக்கைகளையே ஒரு பிரமாதமாக மதித்து உங்களையே நாடுகிறார்கள். காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளவேண்டுமென்று சுலோகம் சொல்லுவார்கள். அதன்படி, அயலாருக்கு நம்மிடம் ஒரு பிரமை ஏற்பட்டிருக்கும்போதே நாம் நம்முடைய முக்கியமான கோரிக்கையை நிறைவேற்றிக் கொள்ளவேண்டும். நீ இப்படியே இராப்பகல் படித்துக்கொண்டே இருந்தால், உன்னுடைய மேனி குலைந்து வெகு சீக்கிரம் நீயும் என்னைப்போல ஆகிவிடமாட்டாயா? அதன்பிறகு என் கதிதானே உனக்கும் ஆகும். நாம் இந்த தாசித்தொழிலைப் புண்ணியத்துக்காகவா செய்கிறோம்? பணம் சம்பாதிக்கத்தானே நாம் இந்தத் தொழிலைச் செய்கிறோம். இன்னுனென்பது தெரியாத கண்ட மனிதர்களிடத்திலெல்லாம், நாம் நயவஞ்சகமாக நடந்து, அவரிடத்தில் நாம் உயிருக்குயிராக இருப்பதுபோல நடித்து, அவரை ஒரு நிமிஷம் காணுவிட்டால், நாம் உயிரை விட்டுவிடக் கூடியவர்களென்று வெளிவேஷம் காட்டி, நம்முடைய தேகத்தை அவர்களுடைய இஷ்டம்போலச் செய்துகொள்ள விட்டு, நாமும் அதை சுவர்க்கபோகமென்று மதிப்பதாய் வாய்விட்டுச் சொல்லி அவர்களை ஏமாற்றுகிற

தெல்லாம், அவர்களிடத்திலிருக்கும் பணத்தைப் பறிப்பதற்கன்றி, அது பரோபகாரமான காரியமென்று நினைத்தாவது, அல்லது, அவர்கள் ஒவ்வொருவரிடத்திலும் நாம் உண்மையான மோகங் கொண்டாவது செய்கிற காரியமல்ல. நாம் காலம், இடம், வகை, கருவி ஆகிய எல்லாவற்றையும் நன்றாய் அறிந்து சரியானபடி எதையும் செய்யவேண்டும். நாய் வேஷம் போட்டால், நன்றாய்க் குலைத்தே தீரவேண்டும். தாசி வயிற்றில் பிறந்த நீ இப்படிப்பட்ட சரியான பக்குவகாலத்தில், நம்முடைய ஜாதித்தொழிலைச் செய்து, நல்ல நல்ல கோடீசுவரர்களையெல்லாம் சொக்கவைத்து, உன்னுடைய வலையில் சிக்கும்படி தளுக்குக் காட்டி, அவர்களுடைய ஐவேஜி முழுவதையும் கரும்பு ரஸம் உரிஞ்சுவதுபோல உரிஞ்சி, லக்ஷம் பத்து லக்ஷம் விலையுள்ள ஆபரணங்களும், ஐந்தாறு வீடுகளும், முப்பது நாற்பது காணி நிலமும், கையில் ரொக்கமாக குறைந்தது ஒரு லக்ஷம் ரூபாயும் தேடிக்கொண்டால், அப்பால் நமக்கு யாரும் ஒரு பொருட்டில்லை. அதன்பிறகு மகாராஜன் வந்தாலும் நாம் காலால் உதைத்துத் தள்ளிவிடலாம். அப்படிச் செய்வதுதான் நம்முடைய ஜாதிக்கேற்ற முறைமை. நம்முடைய முன்னோர்களெல்லோரும் அப்படிச் செய்துதான் நம்மை நல்ல நிலைமையில் வைத்துவிட்டுப் போனார்கள். காலாகாலத்தில் காசைப் பறிப்பதைவிட்டு, நீ உயிரை உரிஞ்சும் புஸ்தகங்களை வைத்து ஓயாமல் படித்துக்கொண்டிருக்கிறாயே! புஸ்தகங்களைப் படித்தால், புத்தி அதிகப்படும் என்று சொல்லுவார்கள். உனக்கோ, புஸ்தகப் படிப்பினால், இயற்கையாக உள்ள புத்தியும் மழுங்கிப் போய் விட்டதுபோலிருக்கிறதே! உன்னுடைய அம்மாள் எந்தப் புஸ்தகத்தைப் படித்தாள். நான் எதைப்படித்தேன். எங்களுக்கெல்லாம் புத்தியும் விவகார ஞானமும் இல்லாமலா போய்விட்டன? நாங்கள் எங்கள் ஆயிசுக்குள் எத்தனையோ ஆயிரம் ரூபாய் சம்பாதித்தழித்து விட்டோம். நீ இந்தப் பாழும் புஸ்தகங்களைப் படித்து, நாங்கள் செய்யாத எந்தஅபூர்வக் காரியத்தைச் செய்யப்போகிறாய்? நாங்கள்காணாதஎந்தப் புதிய சுகத்தை அநுபவிக்கப்போகிறாய்? நம்முடைய ஜாதித்தொழிலை நாமே இளக்காரமாக எண்ணி அலட்சியம் செய்யலாமா? நாம் என்ன, திருடுகிறோமா, முடிச்சவிழ்க்கிறோமா? நம்முடைய தொழிலைக் காட்டிலும் மகா இழிவான தொழிலை எத்தனையோ ஜனங்கள் பின்பற்றி

நடக்கவில்லையா? எல்லோரும் தமது தேகத்தாலோ, மூளையாலோ பிரயாசைப்பட்டு, ஒருவித வேலை செய்துதானே ஜீவனம் செய்கிறார்கள். அதுபோலவே நாமும் நம்முடைய தேகத்தைக்கொண்டும், புத்தி சாதுர்யம், வாய் சாமர்த்தியம் முதலியவைகளை உபயோகித்தும் ஆண்பிள்ளைகளை சந்தோஷப்படுத்தி அவர்கள் தாமாகவே நமக்குப் பொருள் கொடுக்கும்படி செய்கிறோம். ஆனால் மற்ற ஜனங்கள் செய்யும் தொழிலுக்கும் நம்முடைய தொழிலுக்கும் ஒரு முக்கியமான பேதமிருக்கிறது. மற்றவர்கள் செய்யும் தொழில் அவர்களுடைய தேகத்திற்கும் மூளைக்கும் பெருத்த சிரமத்தைக் கொடுக்கிறது. நம்முடைய தொழிலோ அப்படிப்பட்டதல்ல. சுகத்துக்கு சுகம், லாபத்துக்கு லாபம் என்பது நம்முடைய தொழில் ஒன்றுக்குத்தான் பொருந்தும். நாம் மற்றவரை சந்தோஷப்படுத்துவதோடு நம்மையும் சந்தோஷப்படுத்திக் கொள்ளுகிறோம்; இப்படிப்பட்ட மகா சிரேஷ்டமான தொழிலைப்பற்றி எவரும் இகழ்வாகப் பேசவேமாட்டார்களென்பது நிச்சயம். நாம் பொது ஜனங்களுக்கு பெருத்த உபகாரியாக இருக்கிறோம். அப்படி இருக்க, நம்மை ஒருவரும் இகழ்ச்சியாகவே எண்ணமாட்டார்கள். எப்பேர்ப்பட்ட வேதாந்தம் பேசும் பெரிய மனிதரும் ரகஸியத்தில் நம்முடைய வீட்டிற்கு வந்து நம்மிடம் சோறு, பலகாரங்கள் முதலியவை தின்று, நம்முடைய காலால் உதைபடுகிறவர்களாகவே இருக்கிறார்கள். வெளிக்கு மாத்திரம் அவர்கள் பரிசுத்தம் கொண்டாடி, நம்மைத் தாசி என்றும் வேசியென்றும் தூற்றுகிறார்கள். அப்படி அவர்கள் தூற்றுவது எதற்கென்றால், தாங்கள் ரகஸியத்தில் செய்யும் காரியம் வெளியில் தெரியாதிருப்பதற்காகவேயன்றி வேறல்ல. இப்படிப்பட்ட உயர்வான தொழிலைச் செய்வதில், உனக்கு ஏதாவது பிரயாசையுண்டா? இதற்கு ஏதாவது பள்ளிக்கூடத்திற்குப்போய்ப் பரிட்சையில் தேற வேண்டுமா? அல்லது, புஸ்தகங்களைப் படித்துப் புதிய சங்கதி எதையாவது தெரிந்துகொள்ள வேண்டுமா? ஒன்றுமில்லை. நான் சிறிய பெண்ணாயிருந்தபோது, என்னுடைய தாயார் எனக்கு ஒரே ஒரு கலி கற்றுக்கொடுத்தாள். அந்தக் கலி நம்மைப்போலுள்ள ஒவ்வொரு தாசியின் குடும்பத்திலும் சாதாரணமாய் எல்லோருக்கும் தெரிந்தே இருக்கும். அதை நான் உன்னுடைய தாயாருக்கும் கற்றுக் கொடுத்

தேன். அந்தப் பாட்டுதான் நம்முடைய ஜாதியாருக்கே பீஜாக்ஷர மந்திரம் போன்றது. அதன்படி ஒவ்வொரு தாசியும் நடந்துகொண்டால், அவளுக்கு அஷ்ட ஐசுவரியமும் தானகவே அவளைத் தேடிக் கொண்டு வந்துசேரும். நீ இத்தனை புஸ்தகங்களை வைத்துப் படித்துக்கொண்டிருக்கிருயே, இவைகளில் உள்ள சங்கதியெல்லாம் நான் சொல்லும் ஒருகவியிலுள்ளவிஷயத்துக்கு ஈடாகுமா. அந்தப்பாட்டை நான் சொல்லுகிறேன் கேள். அதை மாத்திரம் நீ மனப்பாடம் செய்து அதன்படி நடந்தால், உனக்கு சகலமான பாக்கியமும் உடனே சித்திக்கும். இந்தப் புஸ்தகங்களை யெல்லாம் தூக்கி அப்பால் போடு. நான் சொல்வதைக் கவனமாய்க் கேள்.

"கொச்சியுறு மஞ்சள் வங்காளமுறு பச்சை யிலை
கூறு சண்பக மொட்டுடன்
கூடிய நலங்கு மஞ்சனமாடி பொற்கெண்டை
கொண்ட வெண்துகிலுடுத்துக்
கச்சிளங் கொங்கைமேல் கந்தபரிமள களப
கஸ்தூரி குமுகுமென்னக்
கனக நவரத்னமய பூஷணம் பூண்டு கிளி
கையின் மிசை யேந்தி நலமாய்ப்
பச்சை மயில் போ லிரதிவேளைக்கு மிகுசரச
பரிகாச நகை புரிந்து
பண்பான மேடை யுப்பரிகையிலிருக்கும்
பரத்தை யுண்டாவளென்ருல்,
வஜ்ரதா னுலகத் தரம்பையிலு மதிகமாம்."

இந்த உபதேசம் எப்படி இருக்கிறது பார்த்தாயா? இதில் சொல்லப்பட்டிருப்பது போல நடந்து கொள்வது ஒரு பிரயாசையான காரியமா? இதன்படி நீ நடந்துகொள்ள வேண்டுமென்றுதான் நான் சொல்வது. இன்று மத்தியானம் நான் உனக்கு வேறே என்ன சொன்னேன்? நாம் இருக்கும் இந்த சந்திற்குள் தக்க பெரிய மனிதர்கள் எவரும் வருவதற்கும், உன்னைப் பார்ப்பதற்கும் சந்தர்ப்பம் ஏற்படாது. ஆகையால் சாயுங்கால வேளையில், ஓர் அரைமணி நேரத்திற்கு ஒரு பீடன் வண்டியை வாடகைக்குப் பேசிக்கொண்டு அதில் நீயும் நானும் உட்கார்ந்து கடற்கரையில் பெருத்த சீமான்

களும், வர்த்தகர்களும், உத்தியோகஸ்தர்களும் வந்து உலாவும் இடங்களில் போய் இருந்துவிட்டு வந்தால், அதுவே போதுமானது. உன்னுடைய அழகு தானகவே பாக்கி வேலையைச் செய்துவிடும். உன்னைப் பார்க்கும் ஒவ்வொரு பெரிய மனிதனுடைய மனசிலும் உனக்குத் தெரியாமலே மன்மதபாணம் பாய்ந்து துளைத்து அவர்கள் உன்னை அதற்குப்பின் ஒரு நிமிஷமும் மறக்காதபடி செய்துவிடும். பிறகு, ஒவ்வொருவனும் நீ இருக்கும் இடம் எங்கே என்பதை நிரம்பவும் அக்கரையாக விசாரித்துக்கொண்டு நம்முடைய வீட்டுக்கு வந்துசேருவது நிச்சயம். அதை யெல்லாம் எண்ணி, நான் இன்று சாயுங்காலம் ஒரு பீடன் வண்டிக்கு ஏற்பாடு செய்திருந்ததோடு, உன்னிடமும், சாயுங்காலம் 4½-மணிக்கெல்லாம், நீ தலையைப் பின்னிக்கொண்டு ஸோப்பினல் முகங்கழுவி பொட்டிட்டு மையிட்டு உன்னை நன்ருக அலங்கரித்துக் கொள்ளும்படி சொன்னேன். நான் சொன்னதை நீ கொஞ்சமும் இலட்சியம் செய்யாமல் புஸ்தகத்தை வைத்துக் கொண்டு, இடித்தபுளி மாதிரி பேச்சு மூச்சில்லாமல் பூலோகமோ கைலாசமோ வென்று மெய்ம்மறந்து உட்கார்ந்திருக்கிருய்! மணி 5-அடித்து விட்டது. பீடன் வண்டிக்காரன் வந்து, வண்டி கொண்டு வரட்டுமா என்று கேட்கிருனே; அவனுக்கு நான் என்ன சொல்லுகிறது. புஸ்தகத்தை அப்பால் போட்டுவிட்டு எழுந்து வா சீக்கிரம்; கீழே போய்ச் சிங்காரித்துக் கொள்ளலாம்" என்று பயமுறுத்தலாகவும், நயமாகவும் கூறி முடித்தாள்.

அவளது கொடிய சொற்களைக் கேட்ட பெண்மணி அவளுக்கு எவ்விதமான உத்தரம் சொல்வதென்பதை அறியாதவளாய்க் கீழே குனிந்தபடி மௌனமாக வீற்றிருந்தாள். அவள் ஏதேனும் மறுமொழி கொடுப்பாளென்று கிழவி சிறிதுநேரம் பொறுத்துப் பார்த்தாள். அது வீணுகவே, உடனே கிழவிக்கு முன்னிலும் அதிகரித்த கோபம் பிறந்து விட்டது.

அவள் மறுபடியும் பேச ஆரம்பித்து "என்னடீ வைதேகி! நான் கேட்பது உன் காதில் படவில்லையா? அல்லது, கேட்டாலும் ஏதோ காக்கை, குருவி கத்துகிறதென்று நினைத்து உன் வேலையை நீ கவனித்துக் கொண்டிருக்கிருயா? 'இவள் சொல்வதற்கெல்லாம், நாம் ஊமைபோல பதில் சொல்லாமல் இருந்துவிட்டால், இவள்

நாய்போலக் கொஞ்சநேரம் குலைத்துவிட்டுப் போய்விடுவாள்; பிறகு நம்முடைய போக்குப்படியே காரியத்தைச் செய்வோம்,' என்று நினைத்து நீ இப்படிப் பேசாமடந்தையா யிருக்கிறாயா? நானும் ஒரு நாழிகை நேரமாய்க் கிளிப்பிள்ளைக்குச் சொல்வதைப்போல எவ்வளவோ நயமாகவும், உன் மனசில் படும்படியாகவும் சொல்லுகிறேன். நீ என்னவோ மூச்சுக்கூட விடவில்லையே! நீ உன் மனசில் என்னதான் எண்ணிக்கொண்டிருக்கிறாய்? அதையாவது வாய் விட்டுச் சொல்லேன். அது சரியாக இருந்தால் அப்படியாவது செய்யலாமே. அடே சநியனே! உன் வாயே அடைத்துப்போய் விட்டதுபோ லிருக்கிறதே! நான் பார்த்தாலும் பார்த்தேன். எந்த ஊரிலும் நான் உன்னைப்போல வக்கிரபுத்தி யுள்ளவளைப் பார்த்ததே இல்லை. பெண்களுக்கு வேறே எதிலே ஆசையில்லாமல் போனாலும், தங்களுக்கு சரியாக அலங்காரம் செய்துகொள்வதில் கூடவா ஆசையில்லாமல், இப்படி நிர்மூடத்தனம் வந்து மூடிக்கொள்ளும்? உன் தலையும், உன் வேஷமும், அழுக்குப் புடவையும் பார்க்கப் பார்க்க, என் வயிறு பற்றி எரிகிறதே; கருவேப்பிலைக்குச்சி போன்ற உடம்பும், அம்மைப்புள்ளிகள் நிறைந்த முகமும் உடைய பரம விகாரமான பெண்களெல்லாம் சாயுங்காலமானால் தலை பின்னி, எஸ் கட்டு, உருளைக்கட்டு, கர்ல் முதலிய வேஷங்கள் போட்டு, மைசூர் சாண்டல்ஸோப்பினால் முகத்தைக்கழுவி, ரோஸ்பவுடர் பூசிக்கொண்டு, மையிட்டுப்பொட்டிட்டு, இமிடேஷன் டயமெண்டு நகைகளைப் போட்டுக்கொண்டு, எலெக்டிரிக் விளக்குக்குப் பக்கத்தில் நின்று கண்ணடித்து ஜாடைகாட்டி, மினிக்கிக் குலுக்கித் தூண்டியைப் போட்டு மீனைப்பிடிப்பதுபோல விடபுருஷர்களை மயக்கி, அவர்களைத் தங்களுடைய வலையில் போட்டுக்கொண்டு தினம், 10, 20 சம்பாதித்துவிடுகிறார்கள். நீ மூக்கும் முழியும் தெய்வரம்பைபோல இருக்கிறாய். நன்றாக அலங்காரம் செய்துகொண்டு நீ ஒரு நாள் பீடன் வண்டியில் கடற்கரைக்குப் போய்விட்டு வருவாயானால், எத்தனையோ பெருத்த பெருத்த ஜெமீந்தார்கள் உன்பாதத்தடியில் சரணாகதி யடைந்துவிடுவார்கள். அப்படிப்பட்ட அபாரமான யோக்கியதை உன்னிடத்திலிருந்தும், நீ இப்படி மூதேவியாய் வீட்டிற்குள் அடைபட்டுக்கிடக்கிறாயே! என்ன துர்ப்புத்தி இது! எங்கே இருந்து இக்

தக் குணக்கு உனக்கு வந்ததடீ! உன்னுடைய அம்மாள் இருந்தாளே. அவள் இப்படியா உன்னைப்போலப் பீடை பிடித்தவளாயிருந்தாள்? நான் கீறின கீற்றை அவள் தாண்டியதையே நான் அறியேன். நான் ஆடு என்றால் ஆடுவாள்; பாடு என்றால் பாடுவாள்; என் இஷ்டத்திற்கு மாறான பேச்சே அவளுடைய வாயிலிருந்து வந்ததில்லை. அவள் எவ்வளவு பயத்தோடு இருந்தாளோ, அவ்வளவுக்கவ்வளவு நீ என்னை இளக்காரம் செய்து மட்டம் தட்டுகிறாயே. நான் 'எள்' என்பதற்கு முன் அவள் எண்ணெயாய் நிற்பாள். அப்படிப்பட்ட மகா உத்தமியான என் மகள் இப்படிப்பட்ட துர்முகியைப்பெற்று என் காலில் கட்டிவிட்டுப் போய்விட்டாளே! உனக்கோ சுயபுத்தியுமில்லை. பிறர்சொல்வதையும் நீ கேட்கிறதில்லை. 'ஏதடா எவ்வளவோ பாடுபட்டு நம்மை வளர்த்து இவ்வளவு பெரிய ஆளாக்கிய நம்முடைய பாட்டி, நமக்குக் கெடுதல் செய்வாளா என்றாவது நீ எண்ணுகிறாயா? அல்லது, நமக்கு எத்தனையோ நன்மைகளைச் செய்யும் நம்முடைய பாட்டியின் மனம் வருத்தப்படும்படி நாம் நடக்கக்கூடாது' என்ற நன்றி விசுவாசமாவது உனக்கிருக்கிறதா? இப்படி நீ என்னிடம் அதிகப் பிரசங்கியாகவும் அடங்காப்பிடாரியாகவும் நடந்து கொள்வதை, உன் தாயார் இருந்துபார்த்தால், அவள் உன்னை என்ன செய்வாள் தெரியுமா? இப்படிப்பட்ட ராக்ஷஸி இருப்பதைவிட இறப்பதே நல்லதென்று, குழியை வெட்டி உன்னை உயிரோடு புதைத்துவிட்டு மறுவேலை பார்ப்பாள். 'நான் தள்ளாத கிழவி; நான் அப்படியெல்லாம் உன்னைக் கண்டிக்க முடியாது' என்று நினைத்தல்லவா நீ இப்படித் தறுதலைத்தனமாய் நடந்துகொள்ளுகிறாய்! நான் யாருடைய நன்மையைக் கருதி இப்படியெல்லாம் உனக்குப் புத்தி சொல்லுகிறேனென்றாவது நீ எண்ணிப்பார்த்தாயா? எனக்கு இனி என்ன ஆகவேண்டும்? எதுவும் பாக்கி இல்லை. எனக்கு வயசு கிட்டத்தட்ட எழுபது ஆய்விட்டது. காடு வா வா வென்கிறது. வீடு போ போ வென்கிறது. நான் பாலியமாயிருந்த வரையில் என் பாட்டி தாயார் முதலியோருக்கு அடங்கி, அவர்களுடைய பிரியப்படி நடந்து, எத்தனையோ பெரிய மனிதர்களுடைய தயவை சம்பாதித்து லக்ஷ லக்ஷமாய்ப் பணம் தேடினேன். நான் பார்க்காத மனிதர் பாக்கி இல்லை. நான் அநுபவிக்காத சுகம் பாக்கி இல்லை. நான்

கட்டாத புடவையும், போடாத ரவிக்கையும் பாக்கி இல்லை. நான் போட்டுப் பார்க்காத நகையும் ஒன்றும் பாக்கி இல்லை. இன்னும் கொஞ்சகாலந்தான் பாக்கி இருக்கிறது. எனக்கு வேண்டிய ஒரு வயிறு சோறு எப்படியும் கிடைத்துவிடும். கள்ளியிலும் சோறு. கற்றாழையிலும் சோறு. தெருவில் அலையும் நாய்கூட எப்படியோ சோறு தின்று வயிறு வளர்த்துவிடுகிறது. ஆகையால் என் சாப்பாட்டுக்கு இல்லாமல் போய்விடுமே என்ற கவலை எனக்குக் கொஞ்சமும் கிடையாது. நம்முடைய மகளின் வயிற்றில் பிறந்த குழந்தை பிற்காலத்தில் ஒன்றுமில்லாமல் நாதியற்றுத் திண்டாடித் தவிக்கப் போகிறதே என்றும், நாம் இதற்குமுன் ஏராளமாகப் பொருள்தேடி அமோகமாய் வாழ்ந்ததைப்போல அவளும் நல்லது பொல்லாததை அநுபவிக்க வேண்டுமே என்றும் நினைத்தே நான் இவ்வளவு தூரம் கவலைப்பட்டு உனக்குப் புத்தி சொல்லுகிறேன். அடீ, வைதேகி! என்ன நான் சொல்லிக்கொண்டே போகிறேன். நீ புஸ்தகத்தை வாசித்துக்கொண்டே இருக்கிறாயே! என்னை நீ ஓர் உயிருள்ள ஜெந்துவாகவே மதிக்கவில்லைபோலிருக்கிறதே!" என்று பலமாகக் கூச்சலிட்டுப் பேசினாள்.

அதைக் கேட்ட பெண்மணி "பாட்டீ! என்னை ஏன் இப்படி உபத்திரவிக்கிறாய்? என் பாட்டிலே நான் ஒரு மூலையில் உட்கார்ந்து, ஏதோ புஸ்தகத்தை வைத்து, நல்ல பொழுதாகப் போக்கிக்கொண்டிருந்தால், அது உனக்குப் பிடிக்கவில்லையா? என்னை வீணில் தொந்தரவுப் படுத்தாதே. எனக்கு அலங்காரமும் வேண்டாம்; கடற்கரையும் வேண்டாம்; பெரிய மனிதர்களுடைய சொத்தும் வேண்டாம்" என்று நிரம்பவும் பணிவாகவும் மரியாதையாகவும் கூறினாள்.

அவளது சொற்களைக் கேட்ட கிழவி முன்னிலும் அதிக ஆத்திரமடைந்து, கடுகடுப்பான முகத்தோடு பேசத்தொடங்கி "ஓகோ! அப்படியா சங்கதி! 'வர வர மாமியார் கழுதைபோலானாள்' என்ற கதை மாதிரி இருக்கிறதே உன் காரியம்! உனக்கு அலங்காரமும் வேண்டாம், பெரிய மனிதருடைய சொத்தும் வேண்டாமோ! அப்படியானால், வேளைக்கு வேளை சடக்கான சாப்பாடு எங்கே இருந்து வரும்? எப்போதும் சிலு சிலுப்பான காற்றுப்பிடித்துக் கொண்டி

ருக்க, மெத்தைவீடு எங்கே இருந்துவரும்? ஓயாமல் படித்துக் கொண்டிருக்க, புஸ்தகங்கள் எங்கே இருந்துவரும்? நம்முடைய உண்மையான யோக்கியதை என்னவென்பதையும், நமக்கு இவ்வளவு சொத்தும் எங்கே இருந்து வந்ததென்பதையும் நம்முடைய உற்பத்தி ஸ்தானம் எது என்பதையும் கொஞ்சம்கூட எண்ணிப் பார்க்காமல், ஏதோ ஆகாயத்திலிருந்து இப்போதுதான் நேரில் குதித்தவள் போலவும், தலைமுறை தலைமுறையாய்ப் பணக்காரரா யிருக்கும் பெரிய மிராசுதாருடைய மகள் போலவும் பேசுகிறாயே! இந்தப் பதினைந்து வருஷகாலமாய் நீ ஒவ்வொரு வேளையிலும் சாப்பிடும் சாதம், நீ கட்டும் துணி முதலியவை எந்தப் பணத்தைக் கொண்டு வாங்குகிறோமென்பதை நீ நினைத்துப் பார்த்தாயா? இப்போது நீ இருக்கும் இந்த மெத்தை வீடு, யாரிடத்திலிருந்து நமக்கு வந்ததென்பது உனக்குத் தெரியுமா? நீ எந்தப் புஸ்தகங்களைப் படித்து மேதாவியாய், இப்படியெல்லாம் பெரிய மனிதர்களை இகழ்கிறாயோ, அந்தப் புஸ்தகங்கள் யாருடைய பணத்தினால் வாங்கப்பட்டவை என்பதை யோசித்துப் பார்த்தாயா? நானும், உன் அம்மாளும் சேர்ந்து அரும்பாடுபட்டு, பல பெரிய மனிதர்களிடத்தில் சம்பாதித்த சொத்துக்களைக் கொண்டுதான் நீ இவ்வளவு பெரிய மனுஷியாகி இப்படிப்பட்ட சௌகரியமான நிலைமையில் இருக்கிறாய். முதலில், நீ யாருக்குப் பிறந்தாய் என்பதாவது உனக்குத் தெரியுமா? பல பெரிய மனிதர்களுடைய இரத்தம் உன்னுடைய உடம்பின் ஒவ்வோர் அணுவிலும் ஓடிக்கொண்டிருப்பதை நீ அடியோடு மறந்துவிட்டாய் போலிருக்கிறது. நீ இவ்வளவு தூரம் அலட்சியமாக மதித்துப் பேசும் பெரிய மனிதர்களாலேயே நீ பிறந்து,வளர்ந்து புத்திசாலியானவளென்பதை மறந்து நீபேசினால், அப்படி நன்றிகெட்ட தனமாய்ப் பேசின வாய்க்கு போஜனம் அற்றுப் போகும். மனிதர் எவ்வளவு மேதாவி யாகி விட்டாலும், தனிகராய் விட்டாலும், எப்போதும், தம்முடைய உற்பத்தி ஸ்தானத்தையும் பழைய நிலைமையையும் மறந்துவிடக் கூடாது. இப்படி யெல்லாம் நீ துர்ப்புத்தி பிடித்து, அடங்காப் பிடாரியாய், சொற்படி நடவாமல், சுயேச்சையாய் நடப்பதற்குத்தானா உன்னை இந்தப் பதினாறு வருஷ காலமாக நான் கிளியை வளர்ப்பதுபோல வளர்த்தது? காலுக்குக் காலாய் நீயும் உன்னுடைய பக்குவகாலத்தில் எங்களைப்போல நம்

முடைய தொழிலைச்செய்து பொருள் சம்பாதிப்பா யென்றும், உன்னால், பிற்காலத்தில் நானும் சுகப்படலாம், நீயும் உன்னுயிசுகால பரியந்தம் நல்ல நிலைமையில் க்ஷேமமாய் இருக்க வேண்டுமென்றும் எண்ணிய என் எண்ணத்தில் மண்ணைப் போடும்படியான வார்த்தைகளைச் சொல்லுகிறாயே! எனக்கு உன்னால் எவ்விதசுகம் ஏற்படாவிட்டாலும், பாதகமில்லை. உன்னை நீ காப்பாற்றிக்கொள்ள வேண்டாமா? நான் திடீ ரென்று வாயைப் பிளந்துவிட்டால், அப்புறம் உன்னை உமியென்று ஊதுவாருண்டா? அரிசி யென்று அள்ளுவாருண்டா? உனக்கு இரங்கி ஒரு வயிறு சோறு போடுவாருண்டா? நமக்கு ஏராளமான சொத்து இருக்கிறது என்று நினைத்து நீ கருவங்கொண்டு இப்படியெல்லாம் திமி ராகப் பேசுகிறாயா? அப்படித்தான், நம்மிடம் என்ன இருக்கிறதென்று நினைத்துக் கொண்டாய்? உன்னுடைய அம்மாள் இருந்தவரையில், பணம் மேன்மேலும் ஏராளமாக வந்துகொண்டே இருந்தது. நமக்கு எதைப்பற்றியும் இலட்சியமில்லாதிருந்தது. நாம் ஏராளமாகச் செலவு செய்து வந்தோம். நீ குழந்தையா யிருக்கும்போதே அவள் இறந்து போய் விட்டாளே! அவள் போனதோடு இந்த வீட்டிலிருந்த லக்ஷ்மியும் போய்விட்டாள். அதுமுதற்கொண்டு இதுபரியந்தம் நம்முடைய கையிலிருந்த பொருள் செலவாகிக்கொண்டே வருகிற தன்றி, வரவு என்று ஒரு பைசா வந்து நான் அறியேன். இத்தனை வருஷமாய் வரும்படியே இல்லாமல் நாம் ஜீவனம் செய்து வந்திருக் கிறோமே. அதற்கு எவ்வளவு பொருள் செலவழிந்திருக்கு மென் பதை நீ எண்ணிப்பார்த்தாயா? நின்று தின்றால் குன்றும் மாளும் என்ற நியாயம் உனக்குத் தெரியாதா? நாங்கள் எவ்வளவோ பாடு பட்டு கல்லு கல்லாய்ச் செய்திருந்த நகைகளை யெல்லாம் ஒவ்வொன் றாய் விற்றுவிற்றுத் தின்று விட்டோம். அதற்குமுன் கையில் ரொக்கமாக இருந்த பணமும் போய்விட்டது. 12, 13, வயசிலேயே நீ புத்தி அறிந்து விடுவாயென்றும், அதற்குப் பிறகாவது, நமக்கு வரும்படி வர ஆரம்பிக்குமென்றும் எதிர்பார்த்தேன். அந்த விஷ யத்திலும், நீ மோசம் செய்து விட்டாய். உன்னுடைய பதினாலாவது வயசில் நீ பிரவிடையானாய். அதன் பிறகாவது நீ நம்முடைய தொழி லைச்செய்ய ஆரம்பிக்கக்கூடாதா? உனக்கு சாந்தி கழிப்பதற்கு ஐம் பது ஆயிரம் ரூபாய் கொடுப்பதாக ஒரு கோமுட்டிச் செட்டியார்

சொல்லி யனுப்பினர். அதையும் நான் உன்னிடம் எத்தனையோ தரம் சொல்லிச் சொல்லிப் பாடிக்கொண்டு வந்தேன். அதை நீ காதில் வாங்கவில்லை. கடைசியில் அந்தச் செட்டியார் இறந்துபோய் விட்டார். இந்த நாலுவருஷ காலமாய் செலவழிக்கப் பணமும், விற்க நகையும் இல்லாமல், கடைசில் இந்த வீட்டை அடமானம் வைத்தது உனக்குத் தெரியாதா? அடமானம் வைத்து வாங்கின இரண்டாயிரம் ரூபாயும் தீர்ந்துபோய் விட்டது. இனி நம்முடைய ஜீவனம் எப்படி நடக்கப்போகிற தென்பதை அறியாமல் நான் பொறியில் அகப்பட்ட எலிபோலத் தத்தளிக்கிறேன். இராத்திரியில் இந்தக் கவலையில் எனக்குத் தூக்கமே பிடிக்க மாட்டே னென்கிறது. என் உடம்பும் மனமும் படும்பாடு இன்ன மாதிரிதான் என்று சொல்லமுடியாது. இப்படி நான் பணத்துக்காக இன்னம் கொஞ்சகாலம் அவஸ்தைப்பட்டுக்கொண் டிருந்தால், நான் மாண்டுபோவது நிச்சயம். நான் என்னைப்பற்றிக் கொஞ்சமும் கவலைப்படவே இல்லை. எனக்குப் பிறகு உன் கதி என்ன ஆகுமோ என்றுதான் என் மனம் கலங்கித் தவிக்கிறது. எது போனாலும் போகட்டும். எப்படியாவது உன்னைக் காப்பாற்றிவிட்டால், போன பொருளையெல்லாம் உன்னைக்கொண்டு, ஒன்றுக்குப் பத்தாய் மறுபடி சம்பாதித்து விடலாமென்று நினைத்தல்லவா நான் மோசம் போனேன். நீ இப்படிப் பைத்தியக்காரத்தனமாய் நடந்துகொண்டால், நாம் இனி எப்படி ஜீவிக்கிறது? அடமானம் வைத்த வீட்டை என்றைக்கு மீட்கிறது? வட்டியோ மலைபோல வளர்ந்துவிட்டது. நமக்கு வருமானம் ஒன்றுமில்லையென்பதும், நாம் பணம் கொடுக்க முடியாத நிலைமையிலிருக்கிறோ மென்பதும், வீட்டை அடமானம் வாங்கி இருப்பவனுக்குத் தெரிந்தால், இதுதான் சமயமென்று அவன் வியாஜ்ஜியம் போட்டு வீட்டை வாயில் போட்டுக்கொண்டு நம்மை வெளிக்கிளப்பிவிடுவான். அதன் பிறகு நாம் உண்ணச் சோறு இல்லாததோடு, நிற்கவும் நிழலில்லாமல் காற்றுடியாய்ப் பறக்கவேண்டியதுதான். வேண்டாம். நான் சொல்வதைக் கேள். வீணுகக் கெட்டுப்போகாதே. இது நல்லதல்ல. என்னிடம் இனி ஒரு காசுகூட இல்லை. நீ சம்பாதித்தால், நாம் மானமாய் ஜீவிக்கலாம். இல்லாவிட்டால், நம்முடைய கதி அதோகதியாகத்தான் முடியும். எனக்கு

நீயே எமனாக ஆவதோடு, நீயும் இனி ஓட்டை எடுத்துக்கொண்டு பிச்சைக்குப்போகவே நேரும்.'' என்றாள்.

வைதேகி:—பாட்டி! நீ சொல்வதெல்லாம் சரிதான். நம்மிட மிருந்த சொத்தெல்லாம் போய்விட்டதென்பது எனக்குத் தெரியாத சங்கதியல்ல. எது எப்படி இருந்தாலும், இந்தத் தாசித்தொழிலை விட கேவலமான ஈனத்தொழில் இந்த உலகத்தில் வேறே இருக்காது என்பதே என்னுடைய உறுதியான எண்ணம். என் உயிர் போவதாயிருந்தால்கூட அந்தத்தொழிலைப் பின்பற்றி நடக்கமாட்டேனென்று நான் எத்தனையோ தடவை உன்னிடம் சொல்லிவிட்டேன். நீ மறுபடி மறுபடி வந்து பழைய கதைகளையே சொல்லிச்சொல்லி என் மனசைப் புண்படுத்துவதோடு, உன் மனசையும் புண்படுத்திக்கொள்ளுகிறாய். இதுவரையில் நம்முடைய முன்னோரும், நீயும், என் தாயாரும் இந்த மகா உபகாரமான தொழிலைச் செய்து, கண்ணியமும் பெருமையும் அடைந்தது போதும். நீங்களெல்லோரும் அக்கிரமவழியில் சம்பாதித்த பொருளெல்லாம் தீர்ந்துபோனதைப் பற்றி நான் நிரம்பவும் சந்தோஷப்படுகிறேன். அந்தப் பணத்தை நாம் உபயோகித்த வரையில், நாம் பெருத்த பாவக்கிருத்தியத்தைச் செய்தவர்களாக இருந்தோம். இனி நம்மை அந்தப் பாவம் தொடராது—என்றாள்.

கிழவி சகிக்க இயலாத பெருத்த கோபாவேசங்கொண்டு தாண்டிக் குதித்தவளாய் "ஓகோ! தாசித்தொழில் ஈனத்தொழிலென்று உனக்கு யாரடி சொன்னது? அந்தச் சிறுக்கியை எனக்கு எதிரில் கொண்டுவந்து விடடி; அவளுடைய தலையைச் சிரைத்துக் கழுதை மேல் ஏற்றிவைத்து அடிக்கிறேன். இந்த மாதிரி துர்ப்புத்தியெல்லாம் உனக்கு எந்த நாயடி சொன்னது? எனக்கெதிரில் சொல்லியிருந்தால், இந்நேரம் அந்தக் குடிகெடுத்த நாயின் குடலைப் பிடுங்கி மாலையாய்ப் போட்டுக்கொண் டிருப்பேனே! உலகத்திலுள்ள ஒவ்வொரு பெண்பிள்ளையும் தன்னுடைய புருஷனிடத்தில் நடந்துகொள்வது மாத்திரம் தாசித்தனமல்லவா? நாமும் கூடுமான வரையில் ஒருவனிடத்திலே உறுதியாக நடந்துகொள்ளத்தானே பார்க்கிறோம். அவன் நமக்கு சரியானபடி பொருள் கொடுத்து நம்மை நிரந்தரமாய் வைத்து சவரக்ஷிக்காமல், கொஞ்ச காலத்தோடு திருப்தியடைந்து நம்மைவிட்

டுப்போனுல், நாம் இன்னொருவனை நாடுகிறோம். குடும்ப ஸ்திரீக ளென்று உயர்வாகச் சொல்லிக்கொள்ளும் ஸ்திரீகளையும் புருஷர் சரியானபடி காப்பாற்றுமலும், சவரக்ஷிக்காமலும், கவனிக்காமலும் இருந்தால், அவர்கள் மாத்திரம் சும்மா இருக்கிறார்களா? அவர்களும் தான் ரகஸியத்தில் வேறே ஆசை நாயகர்களைத் தேடிக்கொள்ளு கிறார்கள். அவர்கள் ஊரார் அறியக் கலியாணம் என்ற அநாவசிய மான ஒரு சடங்கை நடத்தி ஒன்றுய்ச்சேருகிறார்கள். நாம் அதைச் செய்வதில்லை. அவ்வளவுதான் இரண்டு பேருக்கும் உள்ளபேதம். மற்றபடி இருவரும் ஒரே விதமான நடத்தை உள்ளவர்கள்தான். நாம் பணம் வாங்கிக்கொண்டு நம்முடைய உடம்பை வாடகைக்கு விடுகிறோமென்று நீ சொல்ல வருவாய். குடும்ப ஸ்திரீகளுக்கு வேண்டிய சாப்பாடு, நகை, புடவை, ரவிக்கை முதலியவைகளுக்காக புருஷர்கள் பணச்செலவு செய்யவில்லையா? குடும்ப ஸ்திரீகள் சாமான்களாகவே வாங்கிப் புருஷர்களை ஓயாமல் உபத்திரவித்துக் கொண்டிருக்கிறார்கள். நாம் ஒவ்வொன்றுக்கும் அவர்களுக்குத் தொந்தரவு கொடுக்காமல் நம்முடைய தேவைகளுக்கு வேண்டியதைப் பணமாய் வாங்கிக்கொள்ளுகிறோம். இதுதான் பேதமேயொழிய குடும்ப ஸ்திரீகளும், நம்மைப்போல கூலிக்குத் தம்முடைய உடம்பை விற்கிறவர்களென்பதைப்பற்றி சந்தேகமே இல்லை. நாம் நம்முடைய சுயமதிப்பையும் சுய அதிகாரத்தையும் இழக்காமல் கண்ணியமாக இருக்கிறோம். குடும்ப ஸ்திரீகள் புருஷர்களுக்கு நிரந்தரமான அடி மைகளாய் சுயேச்சையின்றிப் பராதீனப்பட்டு, அடி, உதை, திட்டு, தூஷணை முதலியவைகளை யெல்லாம் சந்தோஷமாக ஏற்றுக்கொண்டு மானங்கெட்ட வாழ்வு வாழ்கிறார்கள். என்னைக்கேட்டால், குடும்பஸ்திரீ யாக வாழ்வதே கேவலம் ஈனத்தொழில் என்று துணிந்து சொல்லு வேன். நம்முடைய நிலைமை அவர்களுடைய நிலைமையைவிட நூறு மடங்கு சிலாக்கியமானதென்பது நிச்சயமான விஷயம். நம்முடைய தொழில் இழிவான தொழிலென்று யார் சொல்லுவார்கள். நம்மைப் போலிருக்கும் தாசிகள் சொல்லவேமாட்டார்கள். புருஷருக்கு அடிமை களாயிருக்கும் ஸ்திரீகள்தான் அப்படிச்சொல்லுவார்கள். ஏனென்றால், நாம் நம்முடைய இச்சைப்படி நடந்து நன்றாக அலங்கரித்துக்கொண்டு சகலமான சுகத்தையும் அநுபவிக்கிறோம். நம்மிடம் வந்த புருஷர்

நம்மைப் புகழ்ந்து அவர்களை இகழ்கிறார்கள்; அவர்களை வெறுத்து விலக்கிவிட்டு நம்மிடம் வந்துவிடுகிறார்கள். இதனால், அவர்களுக்கு நம்மேல் உள்ள பொறாமையாலும் வயிற்றெரிச்சலினாலும், குடும்ப ஸ்திரீகள் நம்மைத் தூற்றி, நம்முடைய தொழில் ஈனத்தொழிலென்று பொய்யான அவதூறு சொல்லிக்கொண்டு திரிகிறார்கள். அதையெல்லாம் யார் காதில் போட்டுக்கொள்ளுகிறார்கள். புருஷர்கள் அவர்களை அலட்சியஞ் செய்து நம்மிடம் வந்துகொண்டுதானிருக்கிறார்கள்; தம்முடைய செல்வத்தையெல்லாம் கொடுத்து நம்மைப் பூஜிதையாகத்தான் நடத்துகிறார்கள். நம்முடைய உண்மையான யோக்கியதையும், அருமையும், பெருமையும் நம்முடைய வீட்டுக்கு வந்துவிட்டுப் போகிறவர்களுக்குத் தெரியுமேயன்றி, தூரத்தில் இருந்தபடி பொறாமையினால் தூற்றுகிறவர்களுக்கு என்ன தெரியப் போகிறது. அவர்கள் சொல்லும் வார்த்தைகளுக்கு அர்த்தமே கிடையாது.'' என்றாள்.

வைதேகி:—பாட்டீ! நீ என்னோடு என் இப்படி வீணில் சண்டை போடுகிறாய்! நீ எவ்வளவுதான் கூச்சலிட்டாலும், என்னை வைதாலும், அடித்தாலும், கொன்றாலும், நான் இந்த விஷயத்தில் மாத்திரம் உன்னுடைய சொல்லின்படி நடக்கப்போகிறதில்லை. இந்த விஷயத்தில் நீ சொல்லும் நியாயங்களையெல்லாம் என் காது ஏற்கவே போகிறதில்லை. இந்தத் தொழிலை நான் பின்பற்றி நடக்க வேண்டுமென்று நீ எனக்குச் சொல்வது இது முதல்தடவையல்ல. எத்தனையோ தடவைகளில் நீ ஜாடை ஜாடையாகச் சொல்லிக்கொண்டு வந்திருக்கிறாய். அது எனக்கு சம்மதமில்லையென்பதை நானும் குறிப்பாகப் பல சமயங்களில் வெளிப்படுத்தி இருக்கிறேன். அது எல்லாம் போதாதென்று நீ இப்போது வெளிப்படையாகவே கேட்க ஆரம்பித்தாய்போலிருக்கிறது. நானும் வெளிப்படையாகவே என் மனசை உடைத்து ஒரே முடிவாகச் சொல்லிவிட்டேன். இந்தத் தொழிலைச் செய்ய, எனக்கு இஷ்டமே இல்லை. நீ இந்த விஷயத்தில் அடிக்கடி என்னையும் வதைத்து, உன் மனசையும் சங்கடப்படுத்திக்கொள்வதில், உபயோகமொன்றுமில்லை. பெண்பிள்ளைகள் குடும்ப ஸ்திரீயாக இருப்பது உசிதமானதா, தாசிகளாக இருப்பது உசிதமானதா என்பது இனிமேல் நம்மால் தீர்மானிக்கப்படவேண்டிய

புதிய சங்கதியல்ல. இந்த உலகம் தோன்றிய காலத்திலிருந்தே இந்த விஷயம் முடிவு செய்யப்பட்டுப்போயிருக்கிறது. இந்த உலகத்திலிருக்கும் சகலமான தேசங்களிலுமுள்ள மனித சமூகத்தாரும் இந்த விஷயத்தில் ஆதிகாலத்திலிருந்து ஒரேவிதமான முடிவிற்கு வந்திருக்கிறார்கள். முன்காலத்தில் ஒரு தேசத்தாருக்கும், மற்றொரு தேசத்தாருக்கும் போக்கு வரத்து முதலிய எவ்வித சம்பந்தமுமில்லாதிருந்தும், ஒவ்வொரு தேசத்தாரும் தனித் தனியாக இதே முடிவிற்கு வந்திருக்கிறார்கள். ஒரு ஸ்திரீ கிரமப்படி ஒருவனைக் கலியாணம் செய்துகொண்டு குடும்ப ஸ்திரீயாக இருப்பதே சிலாக்கியமான வாழ்க்கையென்ற கொள்கையையே எல்லோரும் கடைப்பிடித்து நடப்பதோடு, தாசியாக இருப்பதும், நிர்ணயமற்று வாழ்வதும் கேவலம் ஈனத்தொழிலென்றும் கண்டு பிடித்திருக்கிறார்கள். வெகு ஜன வாக்கே தெய்வ வாக்கென்று நீ கேள்வியுற்றதில்லையா? எல்லாவற்றையும் படைத்துக் காத்து அழிக்கும் கடவுள் ஒருவர் இருக்கிறார் என்பது, மனிதர் உண்மை பேசவேண்டுமென்பது, அவர்கள் நற்குண நல்லொழுக்கத்தோடு ஒழுகவேண்டுமென்பது, அவர்கள் திருடக்கூடாது, மோசம் செய்யக்கூடாது, பிறர் மனைவியை நாடக்கூடாது என்பது, இவைபோன்ற நிரந்தரமான கொள்கைகள் எப்படி எல்லா தேசங்களிலும், எந்தக் காலத்திலும் மாறாத உண்மையாக இருந்து வருகின்றனவோ, அதுபோல, ஸ்திரீதர்மமும் ஒருவிதமாக நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. இந்த விஷயத்தில் ஒரு தேசத்தார் ஒருவிதமாகவும், இன்னொரு தேசத்தார் வேறுவிதமாகவும் நடந்துகொண்டால், எது உண்மையானதோ அல்லது சிலாக்கியமானதோ என்று நாம் இப்போது சந்தேகிக்க இடமுண்டு. அநாதிகாலமாக நிர்ணயிக்கப்பட்டுள்ள ஒரு நிரந்தரமான கொள்கையை நீ மாற்றிவிட முடியுமா? நாம் அன்னிய தேசங்களைவிட்டு, நம்முடைய தேசத்திலுள்ள ஒவ்வோர் ஊரையும் எடுத்துக் கொள்வோம். ஓர் ஊரில் ஆயிரம் ஜனங்கள் இருந்தால், அவர்களுள், 990 ஜனங்கள் புருஷன் பெண்ஜாதி என்ற கட்டுப்பாட்டுக்கு உள்பட்டு நடப்பதே கண்ணியமான வாழ்க்கையாக மதிக்கிறார்கள். மிகுதியுள்ள 10 மனிதர் உங்களைப்போல தாசி வேசிகளாயிருக்கிறார்கள். ஒரு விஷயத்தைப் பற்றி ஒருவன் யோசித்துப் பார்ப்பதைவிடப் பலர் யோசித்துப் பார்ப்

1935-3-1

பது மேலானதல்லவா. ஒருவனுடைய அறிவைக் காட்டிலும், பத்துப் பேருடைய மொத்தமான அறிவுக்குப் பற்பல புதிய யூகங்கள் புலப் படுமல்லவா? ஒருவன் யோசித்துக் கண்டு பிடிப்பதைவிட, ஏராள மான ஜனங்கள் யோசித்துக் கண்டு பிடிக்கும் விஷயம் மேலான தாகவே இருக்குமல்லவா? இந்த உலகந் தோன்றிய காலந் தொட்டு பெரும்பாலோரான ஜனங்களால் கையாடப்பட்டு வரும் நிரந்தரமான ஒரு நடவடிக்கையை நீ இவ்வளவு சுலபத்தில் பழித்துப் பேசுவது, வாலறுபட்ட நரி சொன்ன கதைபோலிருக்கிறதே யன்றி வேறல்ல. ஆனால், நீ பரம்பரையாக இதே சிலாக்கியமானதென்று நினைத்து இந்தத் தொழிலையே செய்து வருகிறுயாகையால், உனக்கு இது கெடுதலாகப்படாது. இது போலவே, கள் குடிப்பவர்கள், திருடு கிறவர்கள், பிறன் மனைவியைக்கண்டு ஆசைப்படுகிறவர்கள், சூதாடுகிற வர்கள் முதலியவர்களுக்கு, அவரவர்கள் செய்வது ஈனத்தொழிலாகப் படாது. தாம் செய்வதுதான் சிலாக்கியமான தென்பதற்கு அவர் கள் பல ஆதாரங்களைக்கூட எடுத்துக் காட்டுவார்கள். அந்த ஆதா ரங்களெல்லாம் அவர்களுக்குத்தான் திருப்தி தருமேயன்றி, மற்ற வருக்குத் தராது. இந்த தாசித்தொழில் ஆதியில் நல்ல மேன்மை யான நோக்கத்தோடு ஏற்பட்ட மகா சிலாக்கியமான முறையாக இருந்து காலக்கிரமத்தில் அடியோடு கெட்டு இப்போது நிரம்பவும் தூஷணைக்கு இடமுள்ளதாகி விட்டது. ஆதியில் சில பெண்மணி கள் உலகைத் துறந்த தபசிகள்போல சிற்றின்ப சுகங்களை வெறுத்து, மனிதருக்குப் பணிவிடைசெய்வது கூடாதென்ற விரக்திகொண்டு, கோவில்களுக்குச் சென்று, அங்குள்ள தெய்வங்களுக்குப் பல வகைப்பட்ட பணிவிடைகளைச் செய்து, முக்தி யொன்றையே நாடியவர்களாக இருந்து தமது வாழ்நாட்களை அந்தப் புனிதமான வழியிலேயே போக்கலாயினர். இப்போதும் தாசிகளுக்குக் கோவிலில் ஏற்பட்டுள்ள கடமைகளை நாம் கவனித்துப் பார்த்தால், அவர்கள் கோவிலில் கடவுளுக்கு மங்கள ஆரத்தி எடுத்தல், பாட்டுப் பாடு தல், நடனம் செய்தல், பெருக்குதல், விளக்கேற்றுதல், பாத்திரம் சுத்தி செய்தல் முதலிய ஸ்திரீகளுக்கு உகந்த பணிவிடைகளைச் செய்துவந்தனரென்பது நன்ருக விளங்குகிறது. அவர்கள் தெய் வங்களுக்கே அடிமையென்பதைக் காட்டுவதற்கு, முத்திரை போட்டுக்கொள்வது, பொட்டுக் கட்டிக் கொள்வது முதலிய சடங்கு



182819

களெல்லாம் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட துறையைப் பின்பற்றின ஸ்திரீகள் பக்திப்பெருக்கினல் தூண்டப்பட்டு சிற்றின்பத்தை வெறுத்துப் பேரின்பத்தை நாடி அந்த நிலைமையை ஏற்றுக்கொண்டனராகையால், அவர்கள் மனிதருடைய சம்பந்தத்தினல் தங்களுடைய தேகபரிசுத்தத்தைக் கெடுத்துக்கொள்ளாமல், தங்களுடைய ஆயிசுகாலத்தைக் கடவுளுடைய பணிவிடை செய்வதிலேயே செலவிட்டனர். இத்தகைய மகா அரிதான காரியத்தை எவ்வித இடையூறும் மனத்தளர்வுமின்றிக் கடைசிவரையில் நடத்துவதற்கு, மாருத கடவுள் பக்தியும், உலக விரக்தியும் இருப்பது அத்யாவசியம். வைஷ்ணவர்களில் ஆண்டாள் முதலியோரும், சைவர்வர்களில் காரைக்காலம்மை முதலியோரும் தம்முடைய வாழ்நாளையெல்லாம் கடவுளின் திருப்பணிக்கே அர்ப்பணம் செய்ததாகவும், அவர்களுள் சிலர் கடவுளையே தமது பர்த்தாவாக மதித்ததாகவும் நாம் படிக்கிறேமல்லவா? அவர்கள் செய்தது போலவே நம்தேசத்து தாசிகள் ஆதியில் செய்து வந்திருக்கிறர்கள். அவர்கள் ஆதியில் தெய்வதாசிகளாக இருந்து காலக்கிரமத்தில் மனிதருடைய தாசிகளாக மாறிவிட்டார்கள். ஆதியில் ஒரு தாசி ஒரு கோவிலின் பணிவிடைகளைச்செய்து இறந்துபோனல், அந்தத் தொழில், அவளது குடும்பத்தாராலேயே பரம்பரையாகச் செய்யப்பட்டு வரத்தொடங்கவே, அதில் பற்பல கெடுதல்கள் ஏற்பட ஆரம்பித்தன. ஒரு ஸ்திரீ தானுவே பக்திப்பெருக்கை யடைந்து, உலக சுகத்தை வெறுத்துத் தனது ஆயுளைக் கடவுளின் திருப்பணிக்கு அர்ப்பணம் செய்யவேண்டுவதைவிட்டு, அந்தத் தொழிலை அவர்கள் பிறருடைய கட்டாயத்திற்காகவும், பரம்பரையாக வரும் சுதந்தரத்தை விடக்கூடாதென்ற முறைமையைக் கருதியும் செய்தால், அவள் உண்மையான பரிசுத்தத்தைக் கடைப்பிடிக்க முடியுமா? அவளுக்கு யௌவன காலத்தில் ஏற்படும் பஞ்சேந்திரியங்களின் சபலங்களையும், அவர்களோடு பழகும் விடபுருஷர்களுடைய பாசங்களையும் அவள் விலக்கமுடியுமா? ஒருநாளும் முடியாது. ஆகவே, காலக்கிரமத்தில் தெய்வதாசிகளின் உண்மையான நிலைமை மாறிப்போய்விட்டது. இப்போது அவர்கள் சுயேச்சையாக நடந்து ஆயிரம் மனிதரோடு சம்பந்தம் வைத்துக் கொள்ளலாம். ஆனல் அப்போதைக் கப்போது கோவிலுக்குப் போய், கேளிக்கை முதலிய வெளிப்பகட்டான அலுவல்களை மாத்

திரம் செய்துவிட்டு வருவதோடு, நன்றாக அலங்காரம் செய்து கொண்டுபோய்த் தமது அழகை விளம்பரப்படுத்தித் தமது மோக வலையை விடபுருஷர்கள்மீது வீசிவிட்டு வருவதற்கும், அதை ஒரு தக்க சந்தர்ப்பமாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அன்னிய மதஸ் தர்கள் இந்த வெட்கக்கேடான நிலைமையைக் கண்டு நம்முடைய தெய் வத்தையும், நம்முடைய ஏற்பாடுகளையும் தூஷிக்கிறார்களென்றால், அது நியாயமான தூஷணையே. இப்படிப்பட்ட இழிவை உண்டாக் கும் தாசிகளை நம்முடைய கோவில்களில் நுழையவிடாமல், அவர்க ளுடைய உத்தியோகத்தை எடுத்துவிட்டு, அவர்களெல்லோரையும் பிடித்து அந்தமான் தீவில் கொண்டுபோய் விட்டுவிட்டால், அப்போது தான் நம்முடைய நாடு க்ஷேமமடையும். நமக்கு உண்மையான கண்ணி யமும் ஏற்படும். இந்த தேசத்தில், தம்தம் சம்சாரங்களோடு, இருக் கும் புருஷர்களை அவர்கள் கெடுக்காமல், அந்தமான் தீவில், பெண் ஜாதி யில்லாமல் அவஸ்தைப்படும் புருஷக் கைதிகளுக்கு அவர்கள் உண்மையான உபகாரிகளாக இருப்பார்கள். பாட்டீ! தாசித்தொழில் செய்தால்தான் சுயேச்சையாக இருக்கலாமென்று நீ நினைக்கிறாய்? இது எப்படி இருக்கிறதென்றால், குருவி தன் கூண்டுதான் மோக்ஷலோக மென்று எண்ணுவதுபோலிருக்கிறது. ஆதிகாலத்தில் தெய்வதாசி கள் புருஷரோடு சம்பந்தம் வைத்துக்கொள்ளாமல், தெய்வத்தொண் டுக்கே தம்முடைய தேகத்தை அர்ப்பணம் செய்தார்களே! அதைத் தான் சுயாதீனமென்று சொல்லவேண்டுமே யன்றி, மற்றவருக்கெல் லாம் சுயாதீனமேது? தாசிகள் புருஷருடைய தயவையே நாடாமல், அவர்களோடு எவ்வித சம்பந்தமுமில்லாமல் அலாக்காய் இருப்பார் களானால், அவர்கள் சுயாதிகார முள்ளவர்கள்தான். அவர்கள் பல புருஷர்களை நாடித் தம்முடைய திறமை முழுதையும் காட்டிக் குலுக்கிப் பிலுக்கிப் பொய்யாசை காட்டி அவர்கள் எவ்விதமான ஈனத்தொழிலைச் செய்யச் சொல்லுகிறார்களோ அவைகளையெல் லாம் செய்து, அவர்களுடைய மதியை மயக்கி பிரியத்தை சம்பாதித்து, அவர்களிடமுள்ள பொருளையெல்லாம் பறித்து, அந்தப் பொருளை வைத்துக்கொண்டுதானே, அதன் பிறகு ஒழிந்த சொற்பகாலத்தில் சுயாதிகாரம் வகிக்கவேண்டி இருக் கிறது? மனிதர்களில் துஷ்டர்களும், துன்மார்க்கர்களுமே தமது மனைவிமாரைவிட்டு தாசிவீடுகளுக்கு வருகிறார்களன்றி, சன்மார்க்

கத்தைப் பின்பற்றும் யோக்கியர்கள் தாசிவீட்டுக்கு வருகிறதில்லை. சன்மார்க்கர்களான மனிதர்கள் தங்களுடைய சொந்த மனைவிகளைக் கொடுமையாக நடத்துவார்களென்று நாம் நினைப்பது பொருந்துமா? துன்மார்க்கத்துக்கு அஞ்சாமல் தாசிவீட்டுக்கு வருகிறவர்கள் அவ்விடத்திலும், அவர்களுடைய மோக விகாரம் தீர்ந்தவுடன், தங்களுடைய துன்மார்க்க குணத்தைக் காட்டுவார்களென்பது பொருந்துமா? நீயே யோசித்துப்பார். உலகத்தில் கழிபட்டவர்களும், திடபுத்தி இல்லாதவர்களுந்தானே தாசிவீட்டுக்கு வருகிறார்கள். அவர்களிடத்தில் தாசிகள் எவ்விதமான பெருமையையும் நன்மையையும் அடையப்போகிறார்கள். புருஷனுடைய அறியாமையினாலும், ஸ்திரீகளுடைய மதியீனத்தினாலும், ஏதோ சில குடும்பங்களில் புருஷன் பெண்ஜாதிகளுக்குள் சச்சரவு இருப்பது சகஜந்தான். சில புருஷர் தம்முடைய பெண்ஜாதிகளை நிரம்பவும் கொடுமையாக நடத்தலாம். அதை ஆராய்ந்து பார்த்தால், அது புருஷனுடைய மூடத்தனத்தினாலும் ஏற்படலாம், அல்லது, ஸ்திரீகளின் கெட்டசெய்கையினாலும் ஏற்படலாம். இப்படிப்பட்ட சச்சரவும் கெட்ட நடவடிக்கையும் ஏதோ சில குடும்பங்களில் இருக்குமேயன்றி, எல்லாக் குடும்பங்களிலும் அதே மாதிரியாக இருக்கவே இருக்காது. குடும்ப ஸ்திரீகளும் நம்மைப்போல ஸ்திரீகள்தானே. நம்மிடத்தில் புருஷர்கள் ஆசை வைப்பதுபோல, அவர்களிடத்திலும் வைக்கத்தான் வைப்பார்கள். இரண்டு வகுப்பு ஸ்திரீகளின் தேகஅமைப்பும் ஒரே மாதிரியானதுதானே. ஆனால், நாம் வெளிப்பகட்டை அதிகமாக உபயோகப்படுத்தி புருஷரை மயக்கப் பார்க்கிறோம். குடும்ப ஸ்திரீகள், உண்மையான வாஞ்சை, உழைப்புக்குணம், பணிவுக்குணம், பரிசுத்தமான கற்பு முதலிய அரிய குணங்களைக்கொண்டு புருஷர்களை வசியப்படுத்துகிறார்கள். எந்தக் குணத்துக்கு நிரந்தரமான வெற்றி ஏற்படுமென்பது சுலபத்தில் தெரியக்கூடிய விஷயம். வெளிப்பகட்டால் மனிதரை எத்தனை நாளைக்குத்தான் ஏமாற்ற முடியும். அதனால் மனிதர் தாசிவீட்டில் அதிகமாக நிலைப்பதில்லை. ஒருவன் ஒருநாள் தாசிவீட்டுக்குப்போனால், மறுநாள் அங்கே போவது சந்தேகம். அல்லது, ஒரு தாசி குடும்பஸ்திரீபோல கொஞ்சம் உண்மையான அன்பைக் காட்டுவாளானால், அவ்விடத்தில் புருஷர் கொஞ்சகாலம் நிலைத்து நின்றாலும், எப்படியும், அவர்களுடைய

தொடர்பு நிலைத்ததல்ல. ஆகவே, தாசிகள் புதிய புதிய மனிதரைத் தேடி, அவர்களுடைய தயவை சம்பாதித்துக்கொள்வதற்கு தினந் தினம் எவ்வளவோ பாடுபடவேண்டியது அவசியமாகிவிடுகிறது. ஒருநாளில் பெரும்பாகமும் இப்படிப் புருஷருடைய நோக்கப்படி கேவலம் அடிமையிலும் அடிமையாய் நடந்து இரண்டொரு நாழிகை நேரம் சுயேச்சையாக இருப்பது உண்மையான சுயாதீன மாகுமா? ஒருநாளுமில்லை. ஒருநாளில் நமக்கு உடம்பு அசௌக்கியமாக இருக்க லாம்; அதை நாம் நம்மிடம் வரும் புருஷரிடம் காட்டிக்கொள்ள முடியுமா? அல்லது, நம்மை நாடிவரும் புருஷர்கள் கேவலமான ஜாதியைச் சேர்ந்தவர்களாகவோ, அல்லது, துர்வியாதிகள் உடைய வர்களாகவோ இருக்கலாம். அதனால், நம்முடைய உடம்பு கெட்டு அழிந்துபோவது நிச்சயமல்லவா. இப்படிப்பட்ட கெடுதல்கள் குடும்ப ஸ்திரீகளுக்கு இல்லை யல்லவா. இது நிற்க, நமக்கென்று உரி மையுடைய ஆண் பிள்ளைகள் இல்லாமல் போனால், அயோக்கியர்கள், துஷ்டர்கள், திருடர்கள் முதலியோர் நம்முடைய வீட்டில் நுழைந்து கலகம் செய்து நம்மை மானபங்கப் படுத்தினால், நம்மைக் காப்பாற்ற யார் வருவார்கள்? குடும்ப ஸ்திரீகளுக்கு இப்படிப்பட்ட அபாயம் ஏற்படாதல்லவா. தாம் தொட்டுத் தாலிகட்டின பெண்ஜாதியைப் புருஷர்கள் தங்களுடைய உயிரைக் கொடுத்தாவது காப்பாற்றுவார்க ளல்லவா. ஒரு ஸ்திரீ ஒரு புருஷனைக் கட்டிக்கொண்டுவிட்டால், தன்னுடைய தேகபோஷணை, தன் குழந்தைகளின் தேகபோஷணை முதலிய சகலமான பொறுப்புகளையும் அவர்களுடைய ஆயிசுகால பரியந்தம் புருஷரே ஏற்றுக்கொள்ளுகிறார்களே. நம்மிடம் வரும் புருஷர்கள் அப்படிப்பட்ட அபாரமான பொறுப்பை ஏற்றுக்கொள்வ துண்டோ? அநேகமாய் இல்லையென்றே சொல்லவேண்டும். ஏன்? நாம் காசுக்காகப் பிரியத்தைக் காட்டுகிறோம். அவர்கள் நமக்குப்பொருள் கொடுக்கிற வரையில்தான் நாம் அவர்களிடம் ஆசையாக இருக் கிறோம். அவர்களுடைய கஷ்ட நிஷ்டூரங்களை நாம் கவனிக்கிறதே இல்லை. அவர்களிடம் இருக்கிறதோ இல்லையோ, எப்படியும் அவர்கள் திருடியோ, முடிச்சவிழ்த்தோ நமக்குப் பொருள் கொடுக்கவேண்டும். குடும்ப ஸ்திரீகளுடைய விஷயம் அப்படியல்ல. புருஷருடைய கஷ்ட சுகங்களையெல்லாம் பெண்ஜாதிகள் தம்முடையதாக மதிப்பார்கள். புருஷன் கொண்டுவந்தால், அதைச்சமைத்து, முதலில் அவனை

போஷித்துவிட்டு, மிச்சமிருந்தால், தாங்கள் உண்ணுவார்கள். இல்லாவிட்டால், பட்டினி இருப்பார்கள். புருஷர் பொருள் சம்பாதித்துக்கொண்டு வரும்போது காட்டுவதைவிட, அவர்கள் பொருள் அகப்படாமல் வருந்தும் காலத்தில், ஸ்திரீகள் நூறுமடங்கு அதிகமான இரக்கமும், அநுதாபமும் காட்டி, தங்களால் ஏன்ற வரையில் அவர்களை சந்தோஷப்படுத்தி, அவர்களுடைய துன்பம் மனசில் உறைக்காதபடி நடந்துகொள்ளுவார்கள். புருஷர்கள் குடும்ப ஸ்திரீகளுக்குப் பணச்செலவு செய்வதற்கும், நமக்குப் பணச்செலவு செய்வதற்கும் முக்கியமான பேதம் இருக்கிறது. புருஷர்கள் தங்களை அண்டியுள்ள மனைவி மக்களுக்கு இன்றியமையாத போஜனம், உடைகள் முதலியவைகளுக்குரிய பணச்செலவை அவர்களாகவே உணர்ந்து தங்கள் கடமையாகச் செய்கிறார்கள். அப்படிச்செய்வதும், அவரவர்களுடைய சம்பாத்தியத்தைப் பொருத்ததாகவும், புருஷர்களுக்கு அதிக பாரமாய் உறைக்காததாகவும் இருக்கிறது. புருஷர்கள் தாசிகளுக்குக் கொடுப்பது கட்டாயத்தின்மேல் கொடுக்கப்படுவதாக இருக்கிறது. புருஷர்களிடம் பொருள் இருந்தாலும், இல்லாவிட்டாலும், எப்பாடுபட்டாவது, அவர்கள் பொருளைக்கொணர்ந்து கொடுத்தாலன்றி, அவர்களை தாசிகள் வீட்டில் சேர்க்கிறது கிடையாது. ஸ்திரீகளைக் காப்பாற்றும் சகலமான பொறுப்புகளையும் ஏற்றுக்கொண்டு, அவர்களுக்கு எவ்விதமான கவலையும் இல்லாமல் வைத்து சவாக்ஷிக்கும் புருஷர்களுக்கு ஸ்திரீகள் அடங்கி, அவர்களுடைய மனசுக்கு ஒத்தாற்போல நடப்பதை ஈனத்தொழிலென்றால், தாசிகள் ஒவ்வொரு புருஷனிடத்திலும் பணம் பறிக்கும் காலத்தில் அவனிடத்தில் நடந்துகொள்ளும் மாதிரி அதைவிட இழிவானதென்றே சொல்லவேண்டும். இந்த உலகத்தில் யாருக்கும் கீழ்ப்படியாமல் சுதந்திரமாய் இருப்பது கடவுள் ஒருவர்தான். மற்ற எப்பேர்ப்பட்டவரை நாம் எடுத்துக்கொண்டாலும், அவர் ஏதாவது ஒரு விதத்தில் பிறரைச் சார்ந்தே நடக்கவேண்டியவரா யிருக்கிறார். கடவுள்கூட பக்தர்களுடைய வாஞ்சையாகிய விலக்க முடியாத பெரும் பாசத்திற்குக் கட்டுப்பட்டவராக இருக்கிறார். அப்படி இருக்க, கேவலம் அபலைகளான ஸ்திரீகள் கடவுளால் நமக்குத் துணைவர்களாகவும், நமக்கு ஏற்ற ஜதைகளாகவும் ஏற்படுத்தப்பட்டுள்ள புருஷர்களுக்கு அடங்கி, அவர்களுக்கு உகந்த விதமாய் நடப்பது ஒருநாளும் இழி

வாகாது. குடும்ப ஸ்திரீயாக இருந்து வாழ்வது, புருஷரிடம் மன மார்ந்த வாஞ்சையினல் பிணிக்கப்பட்டு, இருவரது ஜீவகாலமும் க்ஷேமகரமாகவும், இன்பகரமாகவும் நடப்பதற்கு உள்ளும் புறமும் ஒத்ததுணைவியாய் இருப்பது. தாசியாக இருந்து வாழ்வது, தனக் குப் பொருள் கொடுப்பதற்குப் புருஷரை ஒரு துணைக்கருவியாகக் கொண்டு, அவர்கள் பொருள் கொடுக்கிறவரையில், அவர்களிடம் நயவஞ்சகநளினங் காட்டி, அவர்களுடைய இஷ்டம்போல நடந்து பொய் வேஷம்போட்டு, பொருள் சம்பாதித்த பிறகு, அவர்களைத் துரத்திவிடுகிறதான கபட நாடகம். அப்படிப்பட்ட பரமபாதக மான தொழிலை நீங்கள் இதுவரையில் செய்தது போதும். போன ஜென்மத்தில் நான் செய்த ஏதோ பெருத்த பாவச்செய்கையினல், நான் உங்களுடைய வயிற்றில் வந்து பிறந்துவிட்டேன். இப்படிப் பட்ட அக்கிரமவழியில் தேடப்பட்ட பணத்தைக்கொண்டு இந்தப் பதினறு வருஷகாலம் நான் இந்த உடம்பை போஷிக்க நேர்ந்துவிட் டதைப்பற்றியும் என் மனம் பிரமாதமாக வருந்துகிறது. ஆனல். ஒருவர் ஒரு குற்றத்தைத் தெரிந்து செய்வதற்கும், தெரியாமல் செய் வதற்கும் வித்தியாசமுண்டல்லவா? ஒருவன், வேண்டுமென்றே இன் னெருவனைக் கொன்றால், அவனுக்கு மரணதண்டனை கிடைக்கிறது, அவன் ஒரு பட்சியைச்சுட, அது தவறி ஒரு மனிதன்மேல் படுகிறது. அதனல் அவன் இறந்துபோகும் பட்சத்தில், அப்படிச்சுட்டவனுக்கு மரணதண்டனை கிடைக்கிறதில்லை. ஏனென்றால், அது தெரியாமல் செய்யப்பட்ட குற்றம். அதுபோல, நான் குழந்தைப் பருவத்தில் சுயேச்சையில்லாமல் பரதந்திரியாயிருந்த காலத்தில், இந்தப் பொருள் எந்த வழியில் வந்ததென்பதே எனக்குத் தெரியாது. அப் படித் தெரிந்திருந்தாலும், இதை வேண்டாமென்று மறுக்கவும் எனக் குப் போதிய பகுத்தறிவும் துணிவும் இருக்க நியாயமில்லை. ஆகை யால், இந்த அக்கிரம ஆர்ஜிதத்தினல், என் உடம்பு வளர்ந்தது உண்மையில் பாவமானலும், அது என்னை அவ்வளவாக பாதிக்கா தென்றே நினைக்கிறேன். இருந்தாலும், இனிமேல் நான் குலஸ்திரீ களின் தர்மத்தைக் கடைப்பிடித்து, நியாயமான வழியில் நடந்து புண்ணியச் செய்கைகளைச்செய்து, என் உடம்பில் எனக்குத் தெரி யாமல் ஏறியுள்ள பாவ அழுக்கை சுத்திசெய்து கொள்ளத் தீர்மா னித் விட்டேன். இதுவே முடிவான விஷயம். ஆகையால், நீ

அடிக்கடி என்னிடம் வந்து நம்முடைய தொழிலைப்பற்றி பிரசங்கம் செய்வதை இன்றோடு விட்டுவிடு. இருந்தால், சாப்பிடுவோம். இல்லாவிட்டால், பட்டினி கிடப்போம். மானத்தோடு வயிறு வளர்க்க, நமக்குச் சக்தி இல்லாவிட்டால், நாம் இருப்பதைவிட இறப்பதே உசிதமான காரியம்.'' என்று அழுத்தந் திருத்தமாகக் கூறினாள்.

அவளது பெருத்த உபந்நியாசத்தைக் கேட்ட கூனற்கிழவியின் கோபம் உச்சநிலையை அடைந்தது. அவளது கைகால்களெல்லாம் துடிதுடிக்கின்றன. கண்கள் சிவந்து தீப்பொறியைக் கக்குகின்றன. தான் ஊன்றிக்கொண்டிருந்த கோலைத்தூக்கி ஒரே அடியாகத் தனது பேர்த்தியின் தலையில் அடித்து அவளைக் கொன்றுவிட வேண்டுமென்ற ஆத்திரம் அவளது மனதில் உண்டாயிற்று. ஆனால் கோலை மேலே உயர்த்தினால், தனது உடம்பு கீழே சாய்ந்துவிடுமென்ற அச்சம் ஏற்பட்டது. அதுவுமன்றி, பலசாலியான அந்த யௌவனக் குமரியை அடித்துக் கண்டிப்பதற்கு தனக்கு சக்தியில்லையென்பதும் தெரிந்தது. ஆயினும், அவள் தனது அபாரமான ஆத்திரத்தை அடக்கமாட்டாதவளாய் “என்னடீ! என்னுடைய தள்ளாத காலத்தில், நீ எனக்கு சாப்பாடு போட்டு என்னைக் காப்பாற்றுவாயென்று நான் உனக்குப் பட்டபாடெல்லாம், இப்படித்தான் விழலுக்கிறைத்த நீராகுமா? நீ எப்போது புத்தியறிவாயென்று நான் காத்ததற்கெல்லாம் இலவு காத்த கிளியின் கதிதானா மிஞ்சியது? இனி என்னால் ஒரு வேளை சோற்றுக்குக்கூட சம்பாதிக்க முடியாது. இன்றுமுதல் எல்லாப் பொறுப்பையும் நீயே ஏற்றுக்கொள்ளவேண்டியதுதான். நீ எப்படித்தான் மானத்தோடு வயிறு வளர்க்கிறாய் பார்க்கலாம். நான் வேண்டுமானாலும், உன்னை உபத்திரவிக்காமல் பட்டினி கிடந்து இறந்துபோகிறேன். நீ வெளியில் போய் உனக்கு ஒரு வயிறு சோறு சம்பாதித்துக்கொள்ள பார்க்கலாம்'' என்றாள்.

வைதேகி “என்ன பாட்டீ! கொஞ்ச நேரத்திற்குமுன், ‘கள்ளியிலும் சோறு, கற்றாழையிலும் சோறு, நாய்கூட வயிறு வளர்த்துவிடும்’ என்று சொன்னாயே. அப்படி இருக்க, நான் மாத்திரம் நாயைக் காட்டிலும் கேவலமாய்ப் போய்விட்டேனா? உன்னுடைய தள்ளாத காலத்தில் உன்னை நான்தான் காப்பாற்ற வேண்டுமென்ற கடமையை நான் மறந்துவிடுவேனென்று நினைத்தாயா? நீ என்

எனக்காக இறக்கவேண்டும்? நான் பிச்சை எடுத்தாவது சாப்பாடு போட்டு உன்னைக் காப்பாற்றி விடுவேன் என்பதை நீ நிச்சயமாக வைத்துக்கொள்." என்றாள்.

கிழவி "ஓகோ! பிச்சைக்குப் புறப்படப் போகிறாயோ! இப் படிப்பட்ட வெறும் வாயாடிகளுக்கெல்லாம் அந்தக் கதிதான் வந்து வாய்க்கும். பிச்சை எடுப்பதுதான் மானமான ஜீவனமோ? பேஷ்! நன்றாயிருக்கிறது. செக்குலக்கைபோல இருக்கும் உன்னைப்போன்ற தடிச்சிறுக்கிகளெல்லாம் பிச்சைக்குப் புறப்பட்டால், ஊரிலுள்ள வர்கள் லேசில் உனக்குப் பிச்சைபோட்டு விடுவார்களென்று எண் ணிக்கொண்டாயோ! அதுவும் இந்தப் பட்டணத்தில், ரூபாய் ஒன்றுக்கு $2\frac{1}{2}$படி அரிசி வாங்கி அவனவன் தன்னுடைய குடும் பத்தைக் காப்பாற்ற முடியாமல் தத்தளிக்கிறான். கெட்டும் பட்ட ணம் சேரென்று இந்த ஊரில் கோடானுகோடி பிச்சைக்காரர்கள் வந்து நுழைந்துகொண்டு நிமிஷத்துக்கு நிமிஷம் வந்து உபத்திரவிக் கிறார்கள். அவர்களுக்கேபோடமாட்டாமல், குடும்பஸ்தர்கள் அவர்களைத் துரத்திவிட்டுக் கதவைச் சாத்திக்கொள்ளுகிறார்கள். 'நான் பிச்சை எடுத்தாவது காப்பாற்றிவிடுகிறேன்,' என்று எல்லோரும் வீம்பு வார்த்தை சொல்வதெல்லாம் பழையகாலத்து சங்கதி. இந்தக் காலத் தில் பிச்சை எடுப்பதைப்போன்ற கடினமான காரியம் எதுவுமில்லை. அதைவிட நம்மைப் போன்றவர்கள் கூலிவேலை செய்வதோ கடினத் திலும் கடினமானது. இதையெல்லாம் உணர்ந்துதான் நாங்களெல் லோரும் தாசித் தொழிலைப் பின்பற்றியது. இதற்கு மிஞ்சிய தொழில் வேறே எதுவுமில்லை. சந்தோஷமாக இருந்தே நாம் சுலபத்தில் பொருள் தேடி விடுகிறோம். இதை நாம் ரகஸியத்தில் தானே செய்கிறோம். இதை யார் காணப்போகிறார்கள்." என்றாள்.

வைதேகி "யார் கண்டாலென்ன காணாவிட்டாலென்ன? பிற ருக்குத் தெரியாதபடி செய்தாலும் குற்றம் குற்றந்தானே? பிச்சை எடுப்பதும், கூலிவேலை செய்வதும் கடினமென்றால், அதற்கு அடுத்த படியாய், நாம் தாசிவேலைக்குத்தான் போகவேண்டுமா? என் நான் ஒரு புருஷனை சாஸ்திரப்படி கலியாணம் செய்துகொண்டு அவனுக்கு அடங்கி மானமாய் வாழக்கூடாதா?" என்றாள். கிழவி "ஓ! சாஸ் திரப்படி கலியாணம் செய்துகொள்ளப் போகிறாயோ! ஏனென்றால்,

நீ நல்ல உயர்வான குடும்பத்தில் பிறந்தவளல்லவா. உன்னைக்கட்டிக் கொடுக்கப் போகிறதாக நான் சொல்லவேண்டிய தொன்றுதான் தாமசம். உடனே காஷ்மீர் மகாராஜா, நேபாள மகாராஜா, ஆடுதன் மகாராஜா, இஸ்பேட்டு மகாராஜா முதலிய மகாராஜாக்களெல் லோரும் 'எனக்கு' 'எனக்கு' என்று போட்டிபோட்டுக் கொண்டு நம் முடைய வீட்டு வாசலுக்கு வந்துவிடமாட்டார்களா? அடி போடீ! கேனம் பிடித்தவளே! உன்னுடைய யோக்கியதை எவ்வளவு என் பதைத் தெரிந்துகொள்ளாமல், ஒருமுட்டாய் ஆகாசத்தில் பறக் கிறாயே! உன்னுடைய அம்மாள் தேவடியாள்; உன்னுடைய பாட்டி தேவடியாள். பாட்டிக்கு முன் தலைமுறை தலைமுறையாக எல்லாரும் தாசிகள். இப்படிப்பட்ட குடும்பத்தில் பிறந்த உன்னை எந்தப் பெரிய மனிதன் வந்து கட்டுவானென்று நினைத்தாய்?" என்று நிரம்பவும் கடுகடுத்த முகத்தோடு ஆத்திரமாகப் பேசித் தத்திக் குதித்தாள்.

வைதேகி "பாட்டீ! எதற்காக இப்படி ஆத்திரப்பட்டுப் பேசு கிறாய்? இனி உனக்கு என்ன தேவை? ஒரு வயிறு சோறும் துணியும் தானே? அவைகளைப் பற்றி நீகவலைப்படாதே. எப்படியாவது அதற்கு நான் வழிசெய்கிறேன். நான் தாசி வீட்டுப் பெண்ணென்பது எல்லோ ருக்கும் தெரியுமாகையால் மேலான குலத்தைச் சேர்ந்த பெரிய மனி தர்கள் யாரும் என்னைக் கட்டிக்கொள்ள மாட்டார்களென்பது வாஸ் தவமே. எல்லோரும் பெரிய மனிதர்களுடைய வீட்டுப்பிள்ளை களையே நாடினால், சின்ன மனிதருடைய வீட்டுப்பிள்ளைகள் போகிற கதியென்ன? கேவலம் தாசியின் வகுப்பைச் சேர்ந்தவளான நான் பெரிய மனிதருடைய சம்பந்தத்தை நாடுவது பலிக்கக் கூடியதல்ல வென்பது எனக்குத் தெரியாதா? அப்படிப்பட்ட பேராசையையெல் லாம் நான் கொள்ளவில்லை. நம்முடைய யோக்கியதைக்குத் தகுந்த கண்ணியமான ஒரு மேளக்காரர் கூடவா என்னைக் கலியாணம் செய்து கொள்ள மறுத்துவிடுவார். அவருக்குக் கிடைக்கும் சொற்ப வரு மானமே நமக்கு ஏதேஷ்டமானது. இப்படிப்பட்ட ஈனத்தொழிலைச் செய்து கோடி பணமும், மாடிவீடும், ஜோடிவண்டியும், வைர நகை களும், பனாரீஸ் புடவைகளும் சம்பாதித்து வாழ்வதைவிட, பரம ஏழையான ஒரு புருஷரைக் கட்டிக்கொண்டு கஞ்சியை யோ, கூழையோ குடித்து மானமாக ஜீவனம் செய்வதே

உத்தமமான வாழ்க்கை என்பது என்னுடைய கொள்கை. ஆசைக்கு அளவில்லை. மனிதனுக்கு தனதான்யாதி சம்பத்துகள் பெருகப் பெருக அவனுடைய ஆசை இன்னும் அதிகரிக்கிறதேயன்றிக் குறைகிற தில்லை; அவனுக்கு மனநிம்மதியும் உண்டாகிறதில்லை. நம்மைவிட ஏழைகளைப் பார்த்து "கடவுள் நம்மை இவ்வளவு மேலான பதவியில் வைத்திருக்கிறாரே" என்று நாம் சந்தோஷப்பட்டு, கிடைத்ததைக் கொண்டு மனத்திருப்தியடையவேண்டும். செல்வமென்பது சிந்தை யின் அமைதி என்ற அருமையான வாக்கியத்தை மாத்திரம் ஒரு மனிதன் அநுபவத்திற்குக் கொண்டுவந்து விடுவானாகில், அவனு டைய ஆயிசுகால பரியந்தம், அவன் சந்தோஷமாகவே இருப்பது நிச்சயம். பாவகிருத்தியங்களும் அவனைக் கண்டு அஞ்சி விலகி நிற்கும். உலகத்தில் ஒரு கோடி ஜனங்கள் இருந்தால், அவர்களுள் ஆயிரம் ஜனங்கள்தான் தனிகர்களாக இருக்கிறார்கள். மற்ற பெரும்பாலோரும் நித்திய தரித்திரர்களாகத்தானே இருக்கிறார்கள். அவர்களுக்கு ஏழ்மைத்தனமும், மனத்திருப்தியும் பிறவிக்குண மாகிவிட்டன. அவர்கள் அன்றாடம் உழைத்து, அதனால் வரும் வருமானத்தினால், தாமும், பெண்டுபிள்ளையும் உண்டு தமது காலத்தை நிம்மதியாகக் கழிக்கிறார்கள். நாளைக்கு வேண்டுமே என்றுதான் அவர்கள் கவலைப்படுகிறார்களா, அல்லது, தேடிக் குவித்து வைத் திருப்பதை திருடர்கள் கொண்டு போய்விடப் போகிறார்களேயென்று தான் அவர்கள் கவலைப்பட்டு இரவெல்லாம் கண் விழிக்கிறார்களா? அதெல்லாம் ஒன்றுமில்லை. அவர்களுடைய தேக ஆரோக்கியமும், மன அமைதியும் தனிகர்களுக்கு அமையுமா? ஒருநாளும் அமை யாது. ஆகையால், நான் அப்படிப்பட்ட கண்ணியமான ஏழ்மை நிலைமையையும், மன அமைதிச் செல்வத்தையுமே நாடுகிறேன். நமக்குத் தகுந்த இடமாகப் பார்த்து என்னை எங்கேயாவது நீ கட் டிக்கொடுக்க ஏற்பாடு செய். நான் என் புருஷருடைய காலில் விழுந்து கெஞ்சி, என்னோடு உன்னையும் உன்னுயிசுகால பரியந்தம் காப்பாற்றி விடும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். அதற்கு அவர் இணங்காவிட்டாலும், அல்லது, அப்படிச் செய்ய அவருக்கு சக்தி யில்லாவிட்டாலும், எனக்குக் கிடைக்கும் ஆகாரத்தை ஆளுக்குப் பாதியாக நாம் பகிர்ந்து கொள்வோம். இதுதான் என்னுடைய முடி

வான எண்ணம். நீ வேறு எவ்விதமான யோசனை சொன்னாலும், அதை நான் ஒப்புக்கொள்ளவேமாட்டேன்'' என்று நிரம்பவும் கண்டிப்பாகவும் உறுதியாகவும் கூறினாள். அதைக் கேட்ட கிழவிக்கு, அதற்குமேல் அவ்விடத்தில் நிற்கவே சகியாமல் போய்விட்டது. அவள் சிம்மகர்ச்சனை செய்து மிகுந்த கோபாவேசம் காட்டி "ஆகா! அப்படியா! நல்ல யோசனை சொல்லுகிறாய்! உனக்கு நிரம்பவும் திமிர் ஏறி இருக்கிறது. அதற்கு நான் தக்க மருந்து தேடுகிறேன். இரு; இரு'' என்று ஆத்திரத்தோடு கூறியவண்ணம் அவ்விடத்தை விட்டு அப்பால் போய், படிக்கட்டின் வழியாகக் கீழே இறங்கிச் சென்றுவிட்டாள்.

சென்றவள் நேராகக் காமரா உள்ளுக்குள் நுழைந்தாள். அந்த அறைக்குள் போடப்பட்டிருந்த அடிபெயர்ந்துபோன நாற்காலி யொன்றன்மேல் உட்கார்ந்திருந்த ஓர் ஆண்பிள்ளை அவளை நோக்கிப் புன்னகை செய்து "என்ன பாட்டீ! காயா பழமா? வண்டி கொண்டு வரலாமா?'' என்று நிரம்பவும் தாழ்ந்த குரலில் வினவினன்.

கிழவியின் ஆத்திரமும் ஆவேசமும் அப்போதும் தணிவடையாதிருந்தமையால், அவள் சிறிதுநேரம் திணரிப் பெருமூச்சு விட்டு வெலவெலத்து நின்று தன்னை ஒருவாறு தெளிவித்துக் கொண்டு "என்ன தம்பீ, இந்தச் சிறுக்கியின் இறுமாப்பு! நானும் கிளிப்பிள்ளைக்குச் சொல்வதைப்போல என்னால் ஆனவரையில் சொல்லிப் பார்த்தேன்; அவள் மசியவேமாட்டேன் என்று சொல்லிவிட்டாளே! நேற்று முளைத்தமுளை எனக்கு என்னென்னவோ பலமாகஉபதேசம் பண்ண ஆரம்பித்து விட்டாளே! அடாடா! அவள் என்ன புராணம் படிக்கிறாள்! என்ன நீதி நியாயமெல்லாம் பேசுகிறாள். இந்த வீட்டுக்குள் இருந்தபடி இவ்வளவு சங்கதியையும் இவள் எங்கேதான் கற்றாளோ தெரியவில்லையே! இந்தப் பாழும் புஸ்தகங்களை வாங்கிக் கொடுத்து இப்போது நமக்கே பெருத்த தீம்பாய் முடிந்துவிட்டது. அவள் இந்தத் தாசித் தொழிலையே செய்யப்போகிறதில்லையாம். யாராவது ஒத்துக்காரனையாவது, துருத்திக்காரனையாவது கட்டிக்கொண்டு சோற்றுக்கு ஏகதாளம் போடப்போகிறாளாம். எப்படி இருக்கிறது பார்த்தாயா இந்தச் சிறுக்கியின் பேச்சு!'' என்றாள். அந்த அறையில் இருந்த பெரிய மனிதர் இன்னாரென்பதை நாம் முதலில் தெரிந்து

கொண்டால்தான், அவரது சொல்லுக்கு தக்க மதிப்பு ஏற்படுமாதலால், அதை நாம் முதலில் சுருக்கமாகக் கூறியபின் அவர்களது விபரீத சம்பாஷணையை கவனிப்போம். செங்காங்கடை சாரங்கபாணி முதலியார் என்றால், வெளியூர்களிலிருந்து சென்னையில் வந்து சுகவாசம் செய்யும் ஜெமீந்தார்கள், இதர பெரிய மனிதர்கள் முதலியவர்களுள் பெரும்பாலோருக்கு அந்தப் பெயர் நன்றாகத் தெரிந்திருக்கும். அவருக்கு சுமார் முப்பது வயதிருக்கும். அவரது தேகம் அமாவாசையிருளின் கட்டி போலவும் மினுமினுப்பாகவும் இருக்கும். முகத்தில் கருத்துக் கொம்புபோல இருபக்கங்களிலும் சூரத்தனமாக நீண்டிருக்கும் கூர்மையான மீசைகளைக் கண்டு, அவர் நிரம்பவும் ஆண்தன்மை வாய்ந்த கம்பீரபுருஷரென்று எல்லோரும் மதிப்பார்கள். ஆனால், அவரிடம் ஆண்தன்மை என்பது குதிரைக் கொம்பாக நிறைந்திருந்தது. அவரது காதில் இமிடேஷன் வைரக்கடுக்கன்கள் எக்காலத்திலும் இருந்தன. ஆனால் பகலில் அவர் எப்படி வெளியில் வருவதில்லையோ, அதைப்போல, அந்தக் கடுக்கன்களின் ஒளியும் பகலில் வெளியில் வருவதில்லை. அவரது தொழில் எப்படி இரவில் சோபிக்கிறதோ, அதுபோல, அந்தக் கடுக்கன்களின் ஒளியும் இராக்காலங்களில் மின்சார விளக்கிற்கெதிரில்தான் நன்றாகப் புலப்படும். அவருடைய இடுப்பில், எப்போதும், சேலம் பட்டுக்கரை வேஷ்டியும், உடம்பில் கருப்பு அல்பாகா சட்டையும், தோளில் ஜரிகைநிறைந்த பட்டு உருமாலையும், கையில் மணிக்கட்டுக் கடிகாரம், தங்கச்சங்கிலி முதலியவையும் காணப்படும். அவர் ஒரு நாளைக்கு ஒரு வேளை போஜனம் செய்வாரோ மாட்டாரோ; அது மாத்திரம் சந்தேகமே. ஆனால், அவரது தொந்தி, முகம் முதலியவை கொஞ்சமும் வாடாமல் எப்போதும் கம்பீரமாக இருந்து, அவர் ஒரு பெரிய மனிதர்என்ற பொய்யானதோற்றத்தைஉண்டாக்கிக் கொண்டிருந்தன. அவருக்கு சென்னையில் இருக்க, இடம் கிடையாது. மனைவி, மக்கள் முதலிய சொந்தஜனங்கள் எவரும் இல்லை. அவர் எந்த ஊராரோ, எப்போது இந்த ஊருக்கு வந்தாரோ, அவர் உண்மையில் எந்தஜாதியைச் சேர்ந்தவரோ என்பதை அறிந்தவர் ஒருவருமில்லை. ஆனால், அவர் இந்த நிமிஷம் மோட்டார் வண்டியில் போவார், அடுத்தநிமிஷம் பீடன் வண்டியில் காணப்படுவார், இன்னொரு நிமிஷம் குதிரை வண்டியில்

போய்க்கொண் டிருப்பார். அவருடைய பொழுது அவ்வளவு சுறு சுறுப்பாகப் போய்க்கொண்டே இருக்கும். யாராவது அவரை யாரென்று கேட்டால், தான் துபாஷ் சாரங்கபாணி முதலியாரென்று சொல்லிக்கொள்வார். அவர் அடிக்கடி எழும்பூர், ஸென்டிரல் ஸ்டேஷன் ஆகிய இரண்டு ஸ்டேஷன்களிலும் மெயில்வண்டி வரும் போது காணப்படுவார். அப்படிக் காணப்படுபவர் முதலாவது இரண் டாவது வகுப்பு வண்டிகள் வந்து நிற்கும் இடங்களில் எப்போதும் போய் நிற்பார். வெளியூர்களிலிருந்து முதல் இரண்டாவது வகுப்பு வண்டிகளில் வருபவர்களுள், பார்ப்பதற்குப் பெரிய மனிதர்களாக வும், விட புருஷர்களாகவும், உல்லாஸ புருஷர்களாகவும் காணப்படு கிறவர்களைக் கண்டால், நம்முடைய சாரங்கபாணி முதலியார் கொஞ் சமும் அஞ்சாமல், நேராக அவரிடம் போய் 'குட்மார்னிங், ஸார், வாருங்கள்; வாருங்கள்; ஊரிலிருந்துதானே வருகிறீர்கள்! சௌக்கி யந்தானே! தங்களை நான் எங்கேயோ பார்த்த ஞாபகமாக இருக் கிறது. ஆனால், விவரம் தெளிவுபடவில்லை.'' என்று நிரம்பவும் குழைவாகப் பேசிக் கைகுலுக்கி, அவர்களுடைய வரலாற்றை அவர் களுடைய வாய் மூலமாகவே கிரகித்துக்கொண்டு, அவர்களுக்கு வேண்டிய ஜாகை முதலிய வசதிகளை ஏற்பாடு செய்து கொடுப்பதாகக் கூறி அழைத்துக்கொண்டு போய், அவரவர்களுக்குத் தக்க பங்களா முதலிய வசதிகளைச்செய்து கொடுத்து இரண்டொரு நாளில் அவர் களுக்கு உயிருக்குயிரான தோழராகிவிடுவார். அவ்வாறு அவர்களுக் குச் செய்துகொடுக்கும் மற்ற வசதிகளினால், சாரங்கபாணி முதலி யாருக்கு வரும் வருமானம் ஒரு பிரமாதமல்ல. சென்னையில் ஒவ்வொரு சந்துபொந்து சாக்கடை இண்டு இடுக்குகளிலெல்லாம் மறைந்து கிடக் கும் தாசிவேசிகளுடைய ஜாப்தாவொன்று அன்றுடம் திருத்தப்பட்டு அவரிடம் எப்போதும் தயாராக இருக்கும். வைதீகர்களில் சிலர் பெண்களுக்கும் பிள்ளைகளுக்கும் ஜாப்தா வைத்துக்கொண்டு தரகு பெற்றுக்கொண்டு கலியாணம் கூட்டிவைப்பதுபோல, நமது சாரங்க பாணி முதலியாரும் தம்மிடமிருந்த ஜாப்தாவை உபயோகித்து அத னால், பெரும்பொருள் சம்பாதித்து விரயம் செய்து பெரிய மனித ராய் விளங்கிக்கொண் டிருந்தார். அத்தகைய பரோபகாரியின் ஜாப் தாவில் நமது வைதேகியின் பெயரும் குறிக்கப்பட்டிருந்தமையால்,

அவளை ஒரு கனவானிடம் சேர்த்துவைக்க வேண்டுமென்ற புண்ணிய காரியத்தை மேற்கொண்டே, அவர் பலநாட்களாகக் கூனற்கிழவி யிடம் வந்து பற்பல சூசனைகள் செய்துகொண்டிருந்தார். அவ்வாறு வெளியூரிலிருந்து வந்திருந்த கனவான் தேனும்பேட்டையில் ஒரு பங்களாவில் குடியிருந்தார். அவருக்கு வயது 57; சம்சாரம் இறந்து போய் ஐந்தாறு மாத காலமாயிற்று. அவருக்கு யௌவன ஆசை நாயகி ஒருத்தி தேவையாக இருந்தது. அவரிடம் ரூபாய் ஆயிரம் பெற்றுக்கொண்டு வைதேகியை விற்றுவிட வேண்டுமென்பதே அவர் களது சதியாலோசனை. வைதேகி தானாக அதற்கு இணங்கிவரமாட் டாளென்பது கிழவிக்குத் தெரிந்த விஷயமாதலால், அன்றைய தினம் மாலையில், கடற்கரைக்குப்போவதுபோல போக்குக்காட்டி அவ ளைத் தேனும்பேட்டையில் கொண்டுபோய் ஷை தனிகரிடம் விட்டுவிட வேண்டுமென்பதும் அவர்களது தீர்மானம். அவள் கடற்கரைக்கு வர இணங்காவிடில், வேறு தந்திரம் செய்து அன் றையதினம் இரவிற்குள் அவளைத் தேனும்பேட்டையிலிருந்த தனி கரிடம் சேர்த்துவிடவேண்டுமென்பதும் அவர்களது முடிவு. ஆகவே துபாஷ் சாரங்கபாணி முதலியார் வந்தவுடன் கூனற்கிழவி மேன் மாடத்திற்குப்போய், முன் விவரிக்கப்பட்டபடி வைதேகியிடம் சம் பாஷித்து தன் கோரிக்கையை நிறைவேற்ற மாட்டாதவளாய்க் கீழே இறங்கி வந்து அதை சாரங்கபாணி முதலியாரிடம் வெளியிட் டாள்.

உடனே முதலியார் "இந்தப் பெண்ணின் அழகைப் பற்றியும் குணத்தைப்பற்றியும் நான் அபாரமாகப் புகழ்ந்ததைக் கேட்டு, அந்தப் பெரிய மனிதர் இதே நினைவாகக் கிடந்து தவிக்கிறார். அவர் சோறு தின்று மூன்று நாளாகிறது. இன்றைக்கு நான் எப்படியாவது இவளை அங்கே கொண்டுவந்து சேர்ப்பதாகக் கையடித்து உறுதி சொல்லி விட்டு வந்திருக்கிறேன். நீ ஏதாவது தந்திரம் செய்து இவளை அனுப்புவதாயிருந்தால், நலம். இல்லாவிட்டால், நான் வேறே யாராவது ஒரு பெண்ணைக் கொண்டுபோய்விட்டு, அவள்தான் வைதேகி என்று சொல்லிவிடுகிறேன். இந்தப் பெண்ணை விற்ப வருக்கு ரூபாய் ஆயிரமும், எனக்கு ரூபாய் நூறும் ஆக ஆயிரத்தி நூறுரூபாய் என்னிடம் வந்துவிட்டது. அது என்னுடைய கையிலிரு

ந்து திரும்பி அவரிடம் போகக்கூடாது. அது மரியாதையல்ல. என்ன சொல்லுகிறாய்? யோசித்து முடிவாகச் சொல்லிவிடு'' என்றார்.

அதைக் கேட்ட கூனற்கிழவி சிறிது யோசனைசெய்து "சரி; ஆயிரம் ரூபாய் என்ன அற்ப சொற்பமானதா? நானும் என் மகளும் வருஷக்கணக்கில் தாசித்தொழிலைச் செய்தோம். ஆயிரங்காசைக்கூட ஒரு மொத்தமாகப் பார்க்கவில்லை. வீட்டைத் தேடி வலியவரும் ஸ்ரீதேவியை விட்டுவிடக்கூடாது. இந்த வாய்ப்பட்டியை வைத்துக்கொண்டு இவளோடு நிமிஷத்துக்கு நிமிஷம் ஓரியாடுவதைவிட, ஆயிரம் ரூபாயை வாங்கிக்கொண்டு இவளைத் தொலைத்துத் தலைமுழுகி விடுகிறேன். உன்னிடம் ஒரு மயக்க மருந்து இருக்கிறதென்று நீ சொன்னாயே. அது இப்போது உன் கையிலேயே இருக்குமென்று நினைக்கிறேன். அதை என்னிடம் கொடு. அதில் கொஞ்சம் கலந்து அவளுக்கு வழக்கப்படி 7-30 மணிக்கு சாப்பாடு போட்டு விடுகிறேன். அவள் உடனே தூக்கமும் மயக்கமும் அடைந்து படுத்துக்கொள்வாள். எங்கள் வீட்டில் வீணைப்பெட்டி ஒன்று இருக்கிறது. அந்தப் பெட்டி ஓர் ஆள் நீளமிருக்கிறது. காற்று அதற்குள் போவதற்கு பக்கங்களில் நாலைந்து தொளைகள் உண்டாக்கி விடுகிறேன். அவள் மயங்கி விழுந்தவுடன் எட்டுமணிக்கு பத்து நிமிஷமிருக்கும்போது நான் அவளைத் தூக்கிப் பெட்டிக்குள் விட்டு மூடிவிடுகிறேன். நீ சரியாக எட்டுமணிக்கு ஓர் ஆளோடு ஒரு குதிரை வண்டி கொண்டு வந்து, வீணைப்பெட்டியைத் தூக்கி வண்டியில் வைத்துக்கொண்டு நேராகத் தேனாம்பேட்டைக்குப்போய் உடனே பத்திரமான இடத்தில் பெட்டியை வைத்துக்கொண்டு அதைத்திறந்து அவளை சீக்கிரமாக வெளியில் எடுத்துவிடு. வண்டியில் போகும்போது இருளில் மூடியைக் கொஞ்சம் திறந்துபிடித்துக்கொண்டே போ. அதிக நேரம் பெட்டிக்குள் மூடப்பட்டு இருந்தால், மூச்சு அடைத்துப் பிராணன் போனாலும் போய்விடும். நீங்கள் பெட்டியை எடுத்துக்கொண்டு போகும்போது நான் வீட்டில் இருக்கக்கூடாது. ஏனென்றால, பக்கத்து வீட்டுக்காரர்கள் நாளையதினம் வந்து வைதேகி எங்கே என்றால், நான்இல்லாதபோது யாரோ வந்து அவளை அபகரித்துக்கொண்டு போய்விட்டதாகச் சொல்லி, கொஞ்சம் கூச்சல் போட்டுவிட்டுப் பேசாமல் இருந்து விடலாம். ஆகையால் 8 மணிக்கு நீ வரும்

போது நான்இங்கே இருக்காமல்,பக்கத்துத் தெருவிலுள்ளஇன்னொரு தாசி வீட்டில் இருக்கிறேன். ஏனென்றால், 8-மணி சமயத்தில் நான் அங்கே இருந்ததற்கு அவர்களைச் சாட்சியாகக் கோரவும் அது தோதாக இருக்கும். எல்லாவற்றிற்கும் நீ எனக்குச் சேரவேண்டிய ரூபாயையும், மயக்க மருந்தையும் என்னிடம் கொடு" என்றாள்.

சாரங்கபாணி முதலியார் அவள் கூறிய யோசனைக்கு இணங்கி தம்மிடமிருந்த ஆயிரம் ரூபாய் நோட்டையும், ஒரு சிறிய சீசாவில் சூர்ண வடிவமா யிருந்த மயக்க மருந்தையும் கூனற்கிழவியிடம் கொடுத்து, சரியாக எட்டுமணிக்கு வருவதாகவும், வீணைப்பெட்டிக்குள் வைதேகியைப் போட்டு வைத்துவிட்டு வெளிக்கதவைத் தாளிட்டுக்கொண்டு போகும்படியும் அவளிடம் சொல்லிவிட்டு எழுந்து வெளியில் போய்விட்டார். கூனற்கிழவி பணத்தையும் சீசாவையும் வாங்கி பணத்தை பெட்டியில்வைத்து பத்திரப்படுத்திவிட்டு மருந்து சீசாவை மறைவான மாடமொன்றில் ஒளித்துவிட்டு சந்தோஷத்தினால் மலர்ந்த முகத்தோடு அப்பால் சென்றாள்.

* * * * *

சிறிது நேரத்திற்குமுன் கூனற்கிழவி மேன்மாடத்தில் வைதேகியிடம் சண்டையிட்டுவிட்டு ஆத்திரத்தோடு கீழே இறங்கி வந்ததற்கு இரண்டொரு நிமிஷத்திற்குப் பிறகு வைதேகி தண்ணீர் குடித்துத் தனது தாகத்தைத் தீர்த்துக்கொள்வதற்காக மேன்மாடத்திலிருந்து கீழே இறங்கிவந்தாள். வந்தவள் காமரா உள்ளில் யாரோ இருவர் பேசியதைக் கேட்டு, யார் என்ன பேசுகிறார்களென்பதைக் கவனித்தாள். கவனிக்கவே கிழவி இன்னொரு மனிதனோடு தன் விஷயத்தில் செய்த சதியாலோசனை முற்றும் அவளுக்கு நன்றாகத் தெரிந்துபோயிற்று. அவள் அப்படியே பிரமித்து ஸ்தம்பித்துப் போய், அவர்களது சம்பாஷணை முழுதையும் கேட்டுக்கொண்டு, அவர்கள் பிரிந்துபோனபோது, ஓரிடத்தில் மறைந்திருந்து கிழவிக்குத் தெரியாதபடி திரும்பவும் மேன்மாடம் போய்ச் சேர்ந்து, அப்படிப்பட்ட அபாயகரமான நிலைமையிலிருந்து தான் எப்படித் தப்புவதென்பதைப்பற்றி ஆழ்ந்து சிந்திக்கலானாள்.

அரைநாழிகை காலம் வரையில் அவளது மனம் குழம்பித் தவித்தது. கிழவி தன்மீது சிறிதும் வாஞ்சையில்லாமல் பணமொன்றையே பிரதானமாக மதித்து கேவலம் ஆயிரம் ரூபாய்க்குத் தன்னை

விற்றுவிட நினைத்ததை எண்ண எண்ண, அவளது தேகம் பதறியது. கைகால்களெல்லாம் வியர்த்து வெலவெலத்துப் போயின. மனம் புதிதாகக் கூண்டிலடைக்கப்பட்ட கிளிபோலத் துடி துடித்துத் துள்ளியது. பேர்த்தி பேர்த்தி என்று தன்னைப் பதினறு வயது வரையில் வளர்த்து வந்த கிழவி சிறிதும் இரக்கமின்றி அவ்வளவு சுலபத்தில் தன்னைத் தொலைத்துவிட எண்ணுவாளா என்றும், அப்படி உலகத்தில் வேறே யாராவது செய்வார்களா என்றும் நினைத்து நினைத்து முற்றிலும் ஆச்சரிய மயமாக நிறைந்து தனக்குள் சிந்திக்கலானாள். "இவள் போடும் சாதத்தை நான் சாப்பிடமாட்டேனென்று சொன்னல், அது வழக்கத்திற்கு விரோதமான காரியமாகப்படும். கிழவி உடனே சந்தேகங்கொள்வாள். இவர்களுடைய சதியாலோசனையை நான் தெரிந்துகொண்டு விட்டேனென்று எண்ணிக்கொண்டு எனக்குத் தெரியாமல் வேறே ஏதாவது தந்திரம் செய்து என்னை விற்றுவிட எத்தனிப்பாள். இப்போது தெய்வமே எனக்கு தாகத்தை உண்டாக்கி, கீழே இறங்கிவரச்செய்து இவர்களுடைய சம்பாஷணையைக் கேட்கச்செய்திருக்கிறது. மறுபடி இவர்கள் செய்யும் சதியாலோசனை எனக்குத் தெரியாமல் போனாலும் போய்விடும். நான் அபாயத்தில் மாட்டிக்கொண்டாலும் கொள்ளலாம். நான் உடனே ஏதாவது தக்க பரிகாரம் தேடவேண்டுமென்ற நோக்கத்தோடுதான், தெய்வம் இதை எனக்குக் காட்டிக் கொடுத்திருக்கிறதென்றே நான் யூகிக்கிறேன். ஆனல் நான் சாதம் சாப்பிடமாட்டேனென்பது சுத்த பிசகு. சாதத்தைச் சாப்பிட்டாலோ, நான் மயங்கிப்போவது நிச்சயம். என்னை இவர்கள் அந்த தனிகரிடம் கொண்டுபோய் விடுவார்கள். அவ்விடத்தில் நான் அநாதையாக அகப்பட்டுக் கொண்டு என்ன செய்கிறது. அவர்கள் பலவந்தமாக என்னை மானபங்கப் படுத்திவிடுவது அநேகமாய் நிச்சயம். ஆகையால் சாதம் சாப்பிடுவது கட்டோடு கூடாது. உடனே நான் புறப்பட்டு வீட்டைவிட்டு எங்கேயாவது போய்விடலாமென்றால், இந்த ஊரில் எனக்குப் பழக்கமானவர்கள் யாருமில்லை. இந்த இருளில் நான் எங்கே போகிறது; எங்கே படுத்துத் தூங்குகிறது. என்னைக் கண்டு வேறே துஷ்டர்கள் யாராவது துராகிருதம் செய்ய எத்தனித்தால், என்கதி அதோகதிதான். அல்லது நான் உடனே போய் இவர்களுடைய சதியாலோசனையைப் போலீசாருக்குத் தெரிவித்தால், கிழவி நான் சொல்வது பொய் யென்று சொன்னல், நான் யாரை சாட்சி கோருவது. அதுவுமன்றி,

இவள் எனக்கு எவ்வளவுதான் கெடுதல் செய்தாலும் இவளை அன்னியரிடம் காட்டிக்கொடுக்க, எனக்கு மனம் வரவில்லை. ஆகையால் நான் உடனே புறப்பட்டு வெளியில் போவதும் உசிதமாகப் படவில்லை. ஆகையால் நான் இன்னொரு காரியம் செய்கிறேன். முதலில் நான் இந்தக் கிழவிக்கு சாப்பாடுபோட்ட பிறகல்லவா இவள் எனக்குப் சாப்பாடு பரிமாறுகிற வழக்கம். மயக்க மருந்துள்ள சீசாவை இவள் ஒளித்துவைத்த இடம் எனக்குத் தெரியும். சாயுங்காலமானவுடன் வழக்கப்படி விளக்குப்பொருத்த நான் கீழே போவேனல்லவா. அப்போது கிழவிக்குத் தெரியாமல், அந்த மயக்க மருந்தில் கொஞ்சம் எடுத்து நான் தயாராக வைத்துக்கொண்டிருந்து, கிழவிக்குப் போடும் சாதத்தில் கலந்து பரிமாறிவிடுகிறேன். அவள் அதைச் சாப்பிட்டு உடனே மயங்கி விழுந்து விடுவாள். 8மணிக்கு முன் இவளை எடுத்து வீணைப்பெட்டிக்குள் போட்டு அவன் கொடுத்த ஆயிரம் ரூபாயையும் அதற்குள்ளேயே வைத்து விட்டு, வாசற் கதவை மூடித் தாளிட்டுக்கொண்டு ஏதோ சாக்கைவைத்து மூன்றுவது வீட்டிற்குப்போய்க் கொஞ்சநேரம் இருந்து விட்டு, அவன் வந்து பெட்டியை எடுத்துக்கொண்டு போனபிறகு திரும்பி வந்து விடுகிறேன். கிழவியும் தனிகரும் இரவில் சந்திக்கட்டும். இருவருக்கும் இதனால் நல்ல படிப்பினையும் அவமானமும் உண்டாகட்டும். அப்போதாவது அவர்களுக்கு நல்ல புத்தி வராதா பார்க்கலாம். நான் இந்த ஆயிரம் ரூபாயையும் திருப்பி அனுப்பியதிலிருந்து, நான் பணத்தைத் திரணமாக மதிக்கிறேனென்பது இவர்களுக்கு ருஜுவாகுமல்லவா. கிழவி இங்கே வந்து மறுபடி என்னை ஒன்றுக்குப் பத்தாக இம்சிப்பது நிச்சயமானாலும், அந்த தனிகர் என்னை மறுபடி விரும்பமாட்டாரென்றே நினைக்கிறேன். இதுதான் நல்லயோசனை. இப்படியே செய்துவிடுகிறேன். மற்றப்படி, நான் இனி கிழவியிடம் எப்படி நடந்துகொள்வதென்பதைப்பற்றி, நடக்க நடக்க யோசித்துக்கொள்ளுகிறேன்.'' என்றுவைதேகி தனக்குள் முடிவாகத் தீர்மானித்துக்கொண்டு எப்போது பொழுது போகுமென்று ஆவலோடு காத்துக் கொண்டிருந்தாள். நற்குண மணியான வைதேகியின் எண்ணம் இனிது நிறைவேறட்டுமென்று நினைத்து அவளுக்கு அநுகூலமாக இருளை உண்டாக்க எண்ணியவன் போல, சூரியன் மேற்றிசையில் மறைந்தான். இருள் சூழத்தொடங்கியது. வைதேகி மேன்மாடத்தைவிட்டுக் கீழே இறங்கி விளக்குப் பொருத்தப்போய், தான் உத்தேசித்தபடியே மயக்க

மருந்தில் சிறிதளவு எடுத்து வைத்துக் கொண்டிருந்து கிழவிக்குப் பரிமாறிய காலத்தில், சாதத்தில் அதைக் கலந்து போட்டுவிட்டாள். நினைக்குங் கேடு தனக்கே என்றபடி கூனற்கிழவி சிறிது நேரத்தில் மயங்கிப்படுத்து ஸ்மரணை தப்பிப் பிணம்போலாகி விட்டாள். வைதேகி தான் யோசித்தபடியே மற்ற காரியங்களை யெல்லாம் நிறைவேற்றினளென்பதை மறுபடி விவரிப்பது அநாவசியமாதலால், முடிவைச் சொல்லிவிடுவோம்.

கூனற்கிழவியும், ஆயிரம் ரூபாய் நோட்டும் வைத்து மூடப்பட்டிருந்த பெட்டியை துபாஷ் சாரங்கபாணி முதலியாரும், அவரோடு வந்த ஆளும் தூக்கி, அவர்களோடு வந்த குதிரை வண்டியில் வைத்து ஓட்டிக்கொண்டு தேனும்பேட்டையை நோக்கிச் சென்றனர். அவ்விடத்திலிருந்த தனிகர் தமது சயனமாளிகையில் விளக்குகளை யெல்லாம் அ பித்துவிட்டு வைதேகியின் வரவை ஆவலோடு எதிர்பார்த்திருப்பாராதலால், வைதேகியை அவரிடம் சீக்கிரம் கொண்டுபோய்ச் சேர்க்க வேண்டுமென்று துபாஷ் சாரங்கபாணி முதலியார் வண்டியை வாயுவேக மனோவேகமாய் ஓட்டிக்கொண்டு பறந்தார். கூனற்கிழவி பெட்டிக்குள் அசைந்தாடியபடி ஜாம்ஜாமென்று சோபன அறைக்குப் போய்க்கொண் டிருந்தாள்.

182814

# மனோரஞ்சனியின் சந்தாவிவரம்.

## மாதாந்தப் பரிசு.

இது ஒவ்வோர் இங்கிலீஷ் மாதமும் கடைசித்தேதிக்குள் வெளியாகும் நாவல் சஞ்சிகை. ஸ்ரீமான் வடுவூர். கே. துரைஸாமி ஐயங்காரவர்கள் B. A. இந்த வருஷம் மாயாவிநோதப் பரதேசி என்ற அதி விநோதமான அதிசய நாவலை எழுதிவருகிறார். இந்தக்கதையை, மேற்படியாரால் எழுதப்பட்டுள்ள கும்பகோணம் வக்கீல், அல்லது, திகம்பரசாமியார் என்ற நிகரற்ற நாவலின் பிற்பகுதியென்று சொல்லலாம். திகம்பர சாமியாருடைய அற்புத சாமர்த்தியம் முன்னிலும் பன்மடங்கு அதிகமாக இதில் வெளியாகும். இனி அந்தந்த வருஷத்து நாவல், அந்தந்த வருஷத்திலேயே முடிவுறும்படி எழுத ஏற்பாடு செய்திருக்கிறோமாதலால், இந்தக் கதை அடுத்த வருஷத்திலும் தொடருமோ என்ற யோசனை சந்தாதார்களுக்கு வேண்டியதில்லை.

சந்தா விகிதம், மாதம் ஒன்றுக்கு 200 ரூபாய்க்குமேல் வருமானமுடைய கனவான்களுக்கு ரூ. 3 0 0, மற்ற நேயர்களுக்கு ரூ. 2 8 0; பினங்கு, சிங்கப்பூர் முதலிய அயல்நாடுகளுக்கு 8 அணா அதிகம். அங்குள்ளோருக்கு வி. பி. யில் அனுப்பினால் தபாற் செலவு மாத்திரம் ரூ. 1 4 0. ஆகுமாதலால் அவர்கள் சந்தாப்பணத்தை மணியார்டராகவோ, நோட்டுகளாகவோ அனுப்புவது நலம்.

இந்த வருஷத்தில் இன்னொரு நிரந்தரமான ஏற்பாடும் செய்யப்பட்டிருக்கிறது. இந்த சஞ்சிகைக்கு ஒவ்வொருமாதமும் சந்தாதாராகச் சேருவோர்களுடைய நம்பர்களையெல்லாம் எடுத்து ஒரு லாட்டரிபோட்டு 10 ரூபாய்ப்பரிசு ஒன்று கொடுக்கப்படும். பரிசு பெறுவோருக்கும் பெறாதவருக்கும் ...ருஷம் முடிய சஞ்சிகைகள் அனுப்பப்படும். ஒவ்வொருமாத சஞ்சிகை...யிலும் முந்திய மாதத்தில் இன்னாருக்குப் பரிசு கிடைத்ததென்ற வி...ம் வெளியாகும். தனிப்பிரதி வேண்டுமானால் 4¼ அணாவுக்கு ஸ்டாம்...னுப்பவேண்டும்.

ஜே... விஜய்ம் கம்பனி,

இராயப்பேட்டை

சென்னை.

எங்களிடம் கிடைக்கக்கூடிய புஸ்தகங்கள்.

## வடுவூர்-கே. துரைசாமி ஐயங்காரவர்கள் B. A.யால் எழுதப்பட்டவை.

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| விலாஸவதி | 1-ம் பாகம் | 1 | 8 |
| ஷை | 2-ம் பாகம் | 1 | 8 |
| மதனகல்யாணி | 1-ம் பாகம் | 1 | 8 |
| ஷை | 2-ம் பாகம் | 1 | 8 |
| ஷை | 3-ம் பாகம் | 1 | 8 |
| பூர்ணசந்திரோதயம் | 1-ம் பாகம் | 1 | 12 |
| ஷை | 2-ம் பாகம் | 1 | 12 |
| ஷை | 3-ம் பாகம் | 2 | 0 |
| ஷை | 4-ம் பாகம் | 2 | 0 |
| காளிங்கராயன்கோட்டை ரகசியம் | 1-ம் பாகம் | 2 | 0 |
| ஷை | 2-ம் பாகம் | 2 | 0 |
| சௌந்தர கோகிலம் | 1-ம் பாகம் | 1 | 8 |
| மேனகா | 1-ம் பாகம் | 1 | 8 |
| ஷை | 2-ம் பாகம் | 1 | 8 |
| கும்பகோணம் வக்கீல் அல்லது திகம்பரசாமியார் | 1-ம் பாகம் | 1 | 8 |
| ஷை | 2-ம் பாகம் | 1 | 8 |
| பாலாமணி அல்லது பக்காத்திருடன் | 1-ம் பாகம் | 1 | 4 |
| ஷை | 2-ம் பாகம் | 1 | 4 |
| வஸந்த மல்லிகா | | 1 | 8 |
| வித்தியாசாகரர் | | 1 | 4 |
| திலோத்தமா | | 0 | 12 |
| மாணிக்கவாசகர் | | 0 | 8 |

இதர நூலாசிரியரின் புஸ்[illegible]ங்களும் மற்ற தமிழ் இலக்கண, இலக்கிய இதிகாச[illegible]னங்கள் யாவும் அகப்படும்.

**ஜெகன்மோகி[illegible] ஆபீஸ்,**
26. [illegible] தெரு,
திருவல்லிக்கேணி.

PRINTED AT THE NOBLE PRESS, MADRAS, S. E.